# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்



ஆடி, ஆவணி: 1995 விலை 25/-

வெளிச்சத்தின் அடுத்த இதழ்

# நான்காம் ஆண்டு நிறைவு மலர்

தமிழீழப் படைப்பாளிகள் வழங்கும்

# இலக்கிய விருந்து

- விடுதலைக் காவியம் படைக்கும் போராளிகளின் படைப்புக்கள்
- உயர்தர, மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், கலை, இலக்கிய ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படும் அரங்கியல், சமூக, வரலாற்று, கலை, இலக்கியக் கட்டுரைகள்
- மற்றும் கவிதைகள், சிறுகதைகள், ஓவியங்கள்

இத்தனையும் தாங்கி

அதிக பக்கங்களுடன்

அழகிய வர்ண அமைப்பில் தயாராகிறது.

வெளிச்சம்

# நான்காம் ஆண்டு நிறைவு மலர்

உங்கள் பிரதிக்கு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

15 - 8 - 1995
... நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்


# வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்

☐ வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

☐ உருவாக்கம்:
ஆசிரியர் குழு

☐ ஓவியங்கள்:
தயா

☐ அச்சு:
ம. மரியதாஸ்

☐ இதழமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

தொடர்புகட்கு:

"வெளிச்சம்"

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கோண்டாவில்,
தமிழீழம்.


## தலைவாசல்

இதழ்: 39 ஆடி, ஆவணி: 1995

எமது தமிழீழத் தாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டமானது இழந்துபோன எமது இறைமையைமட்டும் மீளஎடுத்துக் கொள்வதுடன் முற்றுப் பெறக் கூடாது. இந் நாட்டில் எமது இருப்புக்கான நிலையை ஸ்திரப்படுத்துவதுடன் நின்று விடக் கூடாது. எமது தொழில், பண்பாடு, கலைகள் முதலியவற்றை தடமழிந்து போகாது காப்பாற்றுவதுடன் திருப்தியடையக் கூடாது. அதற்கு அப்பாலும் புதிய சமூகம் புதிய வாழ்வு, புதிய வழித்தடம் என்று காலத்துக்கு இசைவான திசையில் எமது போராட்டத்தை நகர்த்திச் செல்ல வேண்டும். தமிழன் என்பவன் முன்னர் வாழ்ந்து முடித்த அந்தப் பழைய "பொற்காலத்துக்காக" மீண்டும் ஏங்குவதல்ல எங்கள் இலட்சியம். பழைய பொற்காலத்திலிருந்து தற்காலத்துக்குத் தாவிப்பாய்வதே எமது நோக்கம். புதிய வாழ்வுக்காக ஒரு ஸ்திரமான அடித்தளமிடுவதே எமது குறிக்கோள்.

எமது தேசியத் தலைவர், கலைஞர்கள், எழுத்தாளர்களுடனான சந்திப்புகளில் அடிக்கடி அறிவுறுத்தும் போது "பழைய, முரண்பாடுகள் நிறைந்த, சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளைக் கட்டியெழுப்பும்போது இந்தச் சமூக மாற்றத்துக்கு ஏற்ப மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழவேண்டும். புதிய உறவுகளைக் கொண்ட, ஒரு புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்" என்று கூறுவார். அதுபோல் எமது படைப்பாளி

களின் பார்வைத் தளமும் சமூகப் புரட்சி பற்றியதாக விசாலிக்க வேண்டும். எமது மக்களின் அகவயமான எண்ணங்கள் நவமயமானதாக எழுச்சிபெற கலை, இலக்கியப் படைப்பாளிகள் தமது படைப்பின் மூலம் போராட வேண்டும். பழைய சடங்குகள், சம்பிரதாயங்களில் ஊறிப் போய் காலங்காலமாக எமது இனம் கட்டுண்டு கிடக்கிறது. மிக நீண்டகாலமாக துடைத்துத் துப்புரவாக்காத கழிவுகளுடன் எங்கள் சமூகம் பின்னிப் பிணைந்து சுழன்று கொண்டிருக்கிறது புதிய வாழ்வு சமைப்போமென்று கூறும் அறிஞர்களிடையேயும் அவர்களுக்குத் தெரியாமலேயே கழிக்கவேண்டிய கருத்தாதிக்கங்கள் இன்னும் கரைந்து போகாதிருக்கிறது. மனிதனுக்கு நன்நெறி காட்டவந்த மதங்களின் பேரால் மூட நம்பிக்கைகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. நிலமானிய சமூகத்தின் எச்ச சொச்சமான சாதி முறைமை விட்டகதை தொட்டகதையாக இன்றும் தொடர்கிறது. பெண்கள் மீதான அடக்குமுறையும் அதன் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்படும் சீதன முறையும் எமது சமூகத்தை இன்னும் ஆட்டிப்படைக்கின்றன. கலை, இலக்கியப் படைப்புகளிலும் மாரீச வலைப்படும் நிலையே தொடர்கிறது. இவற்றை இல்லாதழித்து புதிய சமூகத்துக்கான விதையூன்றலுக்கு உரித்துடைய கலை, இலக்கியப் படைப்பாளிகளே! எமது விடுதலைப் போராட்டத்துடன் எல்லோரும் இணைந்து எமது இறமையை மீட்டெடுப்போம். அதன் அடிப்படையில் புதிய வாழ்வுக்கான நவ தமிழீழம் ஒன்றையும் நிர்மாணிப்போம். அந்தப் பணியை முன்னெடுக்கும் வெளிச்சத்துடன் இணைந்து இலக்கைச் சென்றடைவோம். □□

**1995**

# யூலை 5

## கரும்புலிகள் நாள்



தமது வாழ்வொன்றே குறிக்கோளாக உலகம் நகர, தமது மக்களுக்காகவும், உயரிய கொள்கைக்காகவும் உயிரழித்த உன்னதங்கள். சாவின் நிலை புரிந்தும் காற்றிலும், கடலிலும் சந்தன மேனியைக் கரைத்தவர்கள். ஊரறியாமல், உலகறியாமல் ஒரு பெருஞ் சரித்திரம் படைத்தவர்கள். இவர்கள் நினைவில் நனைவோம்.

— வெளிச்சம்

# வெளிச்சம்



சூடா நாட்டு மரங்களிற்தான்
குருவிகள் கூடுகட்டியுள்ளன.
முட்டையிட்டுக் குஞ்சுபொரிப்பதும்
பொரித்த குஞ்சுகளுக்குப் பயிற்சியளிப்பதும்
அங்குதான் என்பதால்......
மரங்களை வெட்டவேண்டுமென
பருந்துகள் தீர்மானமெடுத்தன.
புதிய பருந்து தலைமையேற்றதும்
உலகமெங்கும் பறந்து உதவிகேட்டது.
கழுகுகளிடமும்
வலலூறுகளிடமும் கைநீட்டியது.
எங்கும் இனிய வரவேற்பு.
மகிழ்ச்சியுடன் திரும்பி வந்ததும்
படைநடத்தும் அண்டங்காகங்கள்
அறிக்கை சமர்ப்பித்தன.
பருந்துகளின் பாதுகாப்புச்சபை கூடி
அடுத்த நடவடிக்கையை ஆராய்ந்தது.
வெட்டரிவாள் வேண்டும்.
குத்தீட்டி வேண்டும்
கடலில் போய்வரக் கட்டுமரங்கள் வேண்டும்.
கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதும்
கொல்லகம்மாலைகள் தேடி
அண்டங்காகங்கள் அலைந்து திரிந்து
கொண்டுவந்து குவித்துவிட்டே
சூடா நாட்டு மரங்களை வெட்டும்
படையெடுப்புக்கு நாட்குறிக்கப்பட்டது
குஞ்சுகள் அஞ்சாமல் போரிடும்
அடுத்தகட்டத் தேவைக்குத்தான்
அடைவைக்க முட்டைகள் வேண்டும்.

— மாலிகா

# மக்கள் சமூகம் விழிப்படையும்போது விடுதலை சாத்தியமாகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயுதப் போராட்ட களத்திலும் எமது விடுதலை வீரர்களே முன்னணிப்படையாக விளங்குகின்றனர். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுடனும் உறுதியுடனும் செயற்படுகிறது. வெகுசன அரங்கிலும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களின் நல்லாதரவு பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே. எமது இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சிகண்டு பொறாமையும் எரிச்சலும் கொண்ட தீய சக்திகள் எமது இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் மிகவும் கீழ்த்தரமான, விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. மக்களிடமிருந்து எம்மை அந்நியமாக்கும் நோக்குடன் எமக்கு எதிராக மிகவும் அபாண்டமான பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக இவர்கள் இயங்கவில்லை. எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடும் ஒரே நோக்கத்திற்காகவே இந்த சக்திகள் செயற்படுகின்றன. இவர்களின் சூத்திரதார நடவடிக்கைகளிலும், பொய்ப் பிரச்சாரங்களிலும் ஏமாந்து போகாது விழிப்புடன் இருக்க வேண்டுமென மக்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் விழிப்படைந்து, புரட்சிகரப் பிரக்ஞைபெற்று, தேசியப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கு கொள்ளும் பொழுதே விடுதலை சாத்தியமாகிறது, மக்கள் மத்தியில் விரக்தியும் சோர்வும், குழப்பமும், நம்பிக்கையின்மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்டசக்தி வலுவிழக்கின்றது. இந்த அரசியல் உண்மையை விடுதலைக்கு விரோதமான சக்திகள் நன்கறிவர். ஆகவேதான் மக்களின் நம்பிக்கையைத் தளர்த்தி, விடுதலைப் பற்றை மழுங்கடித்து, உறுதிப்பாட்டை உடைத்து, உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த இந்த சதிகார சக்திகள் செயற்படுகின்றன.

*(தேசியத் தலைவரின் ''எனது மக்களின் விடுதலைக்காக''... கருத்துத் தொகுப்பு நூலிலிருந்து)*



*தமிழீழத் தேசியத் தலைவர்*
**திரு. வே பிரபாகரன் அவர்கள்**

# இப்படியும்...



ஆதிலட்சுமி சிவகுமார்

வயல்களெல்லாம் எரிந்து கிடந்தன. வைரவர் கோயில்வரை தைரியமாய் நடந்துவந்த வேலருக்கு கால்கள் மெல்ல அச்சம் காட்டின. இராணுவ முகாமின் தொலைத் தொடர்புக் கோபுரம் தெளிவாகத் தெரிந்தது.

இடுப்பில் கிடந்த துவாயை இலுப்பை மரத்தின் கீழ் விரித்துவிட்டு அதில் அமர்ந்தார். சிலுசிலுவென்று காற்று அவரை ஆனந்தத்தோடு தழுவியது!

திரும்பிப் பார்த்தார். தூரத்தே வயல் காணிக்குள் கார்த்திகேசரின் கல்வீடு கம்பீரமாய் நின்றது!

' என்னென்டுதான் இந்தச் சனங்கள் வீடுவாசலை மறந்து போச்சுதுகளோ?......' வயிறு பற்றி எரிந்தது!

' இரவிரவா மனிசரைக் கிடக்க விடாமல் குண்டு போட்டா .. சனம் எழும்பி ஓடாம என்ன செய்யிறது...' தன்னைத்தானே தேற்றிக் கொள்ள முயற்சித்தார்.

எலும்பும் தோலுமாய் -- ...... நாயொன்று ஆடி ஆடி வந்து வைரவர் கோயில் கொட்டிலில் சுருண்டு கிடந்தது!

' தைப்பூசம்...... சித்திராப்பறுவம் ... வைகாசி விசாகம்...... எண்டு இந்தக் கோயிலிலை எத்தினை விசேஷம் நடக்கும் ..... இப்ப... ..'

நீளமான பெருமூச்சொன்றுதான் அவரிடமிருந்து வெளிப்பட்டது.

ஒவ்வொரு விசேஷத்துக்கும் கூடும் சனக்கூட்டத்தை நினைத்துப் பார்த்தது அவர் மனம். ' அந்தக் காலம் இனி எப்ப வரும்... ? ' என்ற ஏக்கம் நெஞ்சில் படர்ந்தது.

அண்ணாந்து பார்த்தார். வைரவர் கோயில் கொட்டிலின் ஓடுகள் சில நொருங்கிவிட வெறும் சிலாகைகள் தெரிந்தன!

இலுப்பைமரம் கிளைகளை அசைத்துஅசைத்து அவருக்கு சாமரை

வீசிற்று. ஓர் அரசகுமாரனைப் போல அவர் ஒருகணம் பெருமிதம் கொண்டார்!

சோளகம் தொடங்கி விட்டால் வயல் வெளிக்குள் பெரிசுசிறிசு வேறுபாடின்றி பட்டமேற்றுவார்கள்....... இப்போது வயல்வெளியின் வான் பரப்பு வெறிச்சோடி அவர் மனதில் வேதனையைப் பிறப்பித்தது!

இரண்டு மாதங்களுக்கு முன்னால் ... மாட்டுக்குப் புல்லுச் செதுக்க வந்த கணபதி சற்றுத்தள்ளித்தான் சடலமாக எடுக்கப்பட்டான் ..... நண்டும் குஞ்சுமாய் இழுபடும் கணபதியின் மனைவிக்காக அவர் இரங்கினார்! கணபதிக்கு வெடி பிடித்ததைக் கேள்விப்பட்டு வேலவரின் மூத்தவள் ஓடோடி வந்தாள். 'அப்பு ..... வெளிக்கிட்டு வாணை...... வீடு போனாப் போகட்டும்......' அவர் மறுத்துவிட்டார்!

'உனக்கும் ஒருநாளைக்கு கணபதிக்கு நடந்ததுதான் நடக்கும்......' அவள் கோபத்தோடு போய்விட்டாள்.

இலுப்பை மரத்தில் இப்போது குருவிகள் கீச்சிட்டன. வெள்ளை நிறத்தில் சிறியதாய்... இலுப்பம் பூக்கள் அவர்மேல் விழுந்தன!

அவரின் மனைவி பொன்னு ..... முன்பெல்லாம் இந்த இலுப்பம் பூக்களைப் பொறுக்கித் துவையலாக்கித் தருவாள்!

மனைவி நினைப்பு அவரை ஒரு கணம் மௌனமாக்கியது!

'ராசாத்தி குடுத்துவைச்சவள்... பூவோடையும் பொட்டோடையும் போட்டாள்? மனது மனைவியை வாழ்த்தியது!

சூரியன் அவரின் தலைக்குப் பின்னால் தகதகத்துக் கொண்டிருந்தது! காற்று மூசி மூசி வெறித்தனமாய் வீசியது!

தூரத்தே...... வயல் வரம்பில்... வரிசையாய் உருவங்கள் ..... அவர் சடாரென்று நிலத்தில் கிடந்த துவாயை எடுத்துக்கொண்டு கொட்டிலுக்குள் மறைந்தார்.

மறைந்து கொண்டவர் அந்த உருவங்களை உற்றுப்பார்த்தார். 'எங்கடை பிள்ளையள் தான்......'

எல்லோரும் முதுகில் பொதிகளுடன்... விதம் விதமான துப்பாக்கிகளுடன்...... ஒன்று இரண்டு பேர் மட்டும் நீளமான குழாய்களை தோளில் சுமந்து சென்றார்கள். 'உந்தக் காம்புக்கு (CAMP) சாத்துப்படி விழப்போகுது...! தன்னளவில் ஊகித்துக் கொண்டார்.

நெஞ்சுக்கூடு லேசாய் நடுங்கியது .. 'ஒரு நாளைக்கு கணபதிக்கு நடந்தது தான் உனக்கும் நடக்கும்...' மூத்தவளின் எச்சரிப்பு குமிழிட்டது. 'இனி இஞ்சை இருக்கிறது வில்லங்கம்... ...' மண்ணைத்தட்டி விட்டு எழுந்தார்.

□ □

தெரு பரபரப்பாக இருந்தது. மூத்தவன் கடைக்குட்டியை சைக்கிளில் வைத்து உருட்டியபடி வேலவர் தெருவைக் கடக்க எத்தனித்தார். 'அப்பு... என்ன இஞ்சை நிற்கிறாய்?......'

சோதி கலகலத்தான்.

# வெளிச்சம்

வளவளப்பான முகத்துடன்... கொஞ்சம் சதைவைத்த உடம்புடன்... அவனை அடையாளம் கண்டுகொள்ள சில வினாடிகள் எடுத்தன வேலவருக்கு. !.... 'எட சோதி ..... ஆளை அடையாளம் தெரியலை... எப்படி உன்ரை பாடுகள் .. மனிசி .. பிள்ளை குட்டிகள் .. எங்கை?......!

'எல்லாரும் சின்னம்மா வீட்டிலை இருக்கினம்... அது சரியணை அப்பு... எப்ப இஞ்சாலை வந்தனி...'

'முந்தநாள் பொழுதுபட...'

'ஏனணை அங்காலை ஏதும் சிக்கலோ...!'

'முந்தநாள் பின்னேரம்...... எங்கடை வயிரவரடியிலை போய் சும்மா படுத்திருந்தன். ஒரு 75 பெடியள் காணும். எல்லாரும் ஆமான துவக்குகளோடை...... பைப்புகள்...... மம் பெட்டியளும் கொண்டு... !

'எங்கை போனவை?...'

'கார்த்திகேசற்றை கல்வீட்டுக்கை போனாங்கள். ஆமிக்குச் சாத்தப்போறாங்கள் போல நடுச்சாமத்திலை ஒண்டெண்டா வரேலாது... நான் நேரத்தோட வந்திட்டன்'

சோதி கீழ்த்தாடையைத் தடவிக் கொண்டு தலையாட்டினான்

'நானும் கனநாளாய் ஊர்ப்பக்கம் போகலை.போனா தேங்காய் கீங்காய் ஏதும் விழுந்தால் எடுத்தரலாம் தான் ..'

கணபதி புல்லுக்குப் போய் நடந்தது தெரியுமே பேசாமல் உங்கினை சந்தையிலை பார்த்து வாங்கு......... அங்கை என்னத்திற்கு...!

'வேண்டுறதுக்கு காசும் இல்லையணை வேணும்...!

'ஏனடா... தொழில்துறை ஒண்டுக்கும் நீ போறலையே...!

'கொஞ்சநாள் விறகு கட்டினன் சரிவரலை... கொஞ்சநாள் கிளாலிச் சனத்தை ஏற்றி இறக்கினன்... அதுவும் சரிவரலை...!

'அப்ப... இப்ப என்னடா மோனை செய்யிறாய்?...!

'உயிரைப் பார்க்காமல் வன்னியிலை போய் சாமான் கொண்டு வாறனான்... அதுவும் கையும் கணக்கும் சரியாய்ப் போகுது...!

'எப்படி இருந்தனாங்கள்... இப்ப இப்படியெல்லாம் இழுபடுகிறோம்... இதுகளுக்கு ஒரு முடிவு வராமலே விடப்போகுது...! வேலவர் நெடுமூச் செறிந்தார்......

'நேரம் போகுது... ஆறுதலாய் வாறன் அப்பு... வரட்டே...' சோதி விடைபெற்றுப் போக...

'பேரப்பிள்ளையை பாடசாலையில் இறக்கிவிட்டு வேலவர் வீடு வந்தார்.

''ஏனணை அப்பு இவ்வளவு நேரமும் சென்றது......? நான் பயந்து போனன்...'' மூத்தவள் வேலவரைக் கேட்டாள்.

''எங்கடை சோதியை தெருவிலை கண்டனான் மோனை கதைச்சாப்போல மினைக்கட்டுப் போனன்...''

'என்னவாம்?...'

'வேற என்ன... சீவியப் பாட்டை நினைச்சு மனவருத்தப் பட்டுப் போறான்...பாவம்...'

# வெளிச்சம்

'வவுனியாவில போய் நல்லாச் சாமான் கட்டியந்து விக்கிறவன்...... சும்மா உனக்கு முன்னாலை அழுகிறான்... நம்பிற்றியே ..!'

மகளின் கூற்றைத்தான் அவரால் நம்ப முடியவில்லை. அவருக்கு எதுவித பதிலும் கூறாது மௌனமாகிப் போனார்.

□□

தெருச்சந்தியில் வாழைகளும், தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் சனநடமாட்டமும் குறைந்திருந்தது. ஓரமாக... கூடாரமொன்றில் நான்கைந்து போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. மலர்கள் தூவப்பட்டிருந்தன.

சில பாடசாலைச் சிறுவர்கள் அந்தப் போராளிகளின் படங்களைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

சைக்கிளை வேலி ஓரமாகவெயில் பிடிக்காது விட்டுப் பூட்டிவிட்டு அந்தக் கூடாரத்தின் அருகே போனார் வேலவர்!

'பிள்ளையள் எந்தச்சண்டையிலே இவையள் செத்தவையாம், அந்த இரு சிறுவர்களையும் பார்த்து .. துயரம் பொங்கக் கேட்டார் அவர்.

'சண்டேலை சாகேலை அப்பு செல் அடிச்சுத்தான் செத்தவயள் ..' துடிதுடிப்பான சிறுவன் சொன்னான்.

'பிளேனுகள் ஒன்டும் இப்ப பறக்கிறேலையே .....'

'பிளேன் அடிக்கேலயணை... காம்பில இருந்து மோட்டர் அடிச்சுத்தான் இந்த அண்ணாக்கள் செத்தவை!... மோட்டரோ எப்ப அடிச்சவன் ..'

நேற்றுக்காலமை இடைக்காட்டிலை அடிச்சதல்லே .. ' சிறுவனின் கேள்வி கூர் முள்ளாய் நெஞ்சுக்குள் குத்தியது.

கொண்டுவந்த காசுக்கு மீன் வாங்கிக் கொண்டு புறப்பட்டார். நெஞ்சுக்குள் ஏதோ கனப்பது போன்று இருந்தது...

முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு திண்ணையில் அமர்ந்து கொண்டார். உடல் வியர்த்துக் கொட்டியது.

'அப்பு விசயம் கேள்விப்பட்டனியே...'

'என்ன மோனே...'

'எங்கடை காத்திகேசற்றை கல் வீட்டுக்கல்லே நேற்று செல் அடிச்சவங்களாம். 6 பெடியன் செத்ததுகளாம்...'

'.................'

'ஆரோ... காசுக்கு ஆசைப்பட்டு பெடியளைக் காட்டிக் குடுத்திட்டாங்கள் ..' மூத்தவளின் அந்த வார்த்தை மீண்டும் அவரைத் தைத்தது!

'உவன் சோதியன்...'

'ஓ... .. சோதியன்... ... சோதிக்கென்ன...'

அவர் குரல் நடுங்கியது

சோதியனை பொடியள் 'பொயின்றில' பிடிச்சிருக்கிறாங்களாம். ......... என்ன நாசமோ தெரியேல்லை ..'

சொல்லியபடி மூத்தவள் பையிலிருந்து மீனை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

சோதியின் சதைபிடித்த வளவளப்பான முகமும் செல் தாக்குதலில் சிதைந்த போராளிகளின் முகங்களும் மாறி மாறி அவர் மனக்கண்ணில் தோன்றின! முகத்தை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு, போராளிகளின் சாவுக்காக அவர் குமுறிக் குமுறி அழுதார். □□

7

"ஈழத்தமிழர் வரலாறு" என்ற பொருளில் யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதும் கட்டுரை வெளிச்சம் இதழில் தொடராக வருகிறது. இந்தத் தொடரின் தொடர்ச்சி இந்த இதழில் பிரசுரமாகிறது.

ப.புஷ்பரட்ணம்

கி.மு 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் இந்து சமண, ஆஜிவிக சமயங்கள் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றுள் இந்து மதம் செல்வாக்குடைய மதமாகத் திகழ்ந்தது. இம்மதத்தின் தொடக்க காலமாக பெருங்கற்காலப் பண்பாடு விளங்குகின்றது இப்பண்பாட்டில் பின்பற்றப்பட்ட முக்கியபண்பாட்டு அபசமான குளமும், ஈமைச் சின்னமுறையும் பிற்காலத்தில் ஆலயத்திற்கும் தீர்த்தக் கேணிக்கும் இடையிலான தொடர்புக்கு அத்திவாரமாக அமைந்ததென்பது தொல்லியலாளரின் கருத்தாகும். இப்பணபாட்டில் தாய்த்தெய்வ வழிபாடு, முருக வழிபாடு என்பன பின்பற்றப்பட்டதை கந்தரோடை, பூனகரி, பொம்பரிப்பு போன்ற தொல்லியல் மையங்களில் கிடைத்த சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வழிபாட்டு மரபு பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து பௌத்த மதத்துடன் இணைந்தும், தனித்தும் வளர்ச்சியடைந்தன. எனினும் பௌத்த மதத்தின் அறிமுகம் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் ஒரு பிரிகோடாக அமைந்ததென்பதில் சந்தேகமில்லை. இம்மதமும், இம்மதத்திற்குரிய மொழியும் இங்கிருந்த திராவிட மக்களிடையே இனம், மொழி என்ற வேறுபாடு கொண்ட இரு பண்பாடு தோன்றி வளரக் காரணமாயின. அவற்றையே வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழ் சிங்களப் பண்பாடு என வரலாற்றாசிரியர்கள் வரையறை செய்துள்ளனர். இன்று சிங்களமக்களின் பெரும்பான்மையோர் பௌத்தர்களாகவும், தமி

# ஈழத்தமிழர் வரலாறு

மூர்களில் பெரும்பான்மையோர் இந்துக்களா கவும் உள்ளனர். ஆனால் இந்நிலை இலங் கையில் பௌத்த மதம் தோன்றி வளர்ந்த காலத்தில் இருந்ததாகக் கூறுவதற்கில்லை. பௌத்த சிங்கள வரலாற்றை முதன்மைப் படுத்தும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூட சிங்கள மன்னர்கள் அனைவரையும் பௌத்த மதத்திற்கு தொண்டாற்றி யவர்கள் எனக் கூறவில்லை. அதேபோல் தமிழ் மன்னர்கள் இந்து மதத்தவர்கள் எனவும் கூறவில்லை. மாறாகத் தமிழர்கள் பௌத்தர்களாகவும், சிங்களவர்கள் இந் துக்களாகவும் இருந்தது பற்றிக் கூறு கின்றன. இதற்கு முக்கிய காரணம் பௌத்த மதத்திற்கு முந்திய இலங்கைப் பண்பாடு தென்னிந்தியத் தொடர்பு கொண்டு வளர்ந்தது போல் பௌத்த மதமும் தென்னிந்திய, சிறப்பாக ஆந்திர தமிழ்நாட்டு மாநிலங்கள் ஊடாகப் பரப் பப்பட்டதே காரணமாகும். இதனால் இலங்கையில் தமிழ் பௌத்தமும் தோன்றி வளர்ந்தது.

வட இந்தியாவிலுள்ள மௌரியத் தலைநகருடன் கொண்ட நேரடித் தொடர்பே இலங்கையில்பௌத்தமதம் பர வக் காரணம் எனமகாவம்சம் கூறுகின்றது. ஆனால் இம்மதம் நேரடியாக மௌரியத் தலைநகரில் இருந்து பரவியதென்பதை விட அசோகன் ஆட்சியில் தென்னிந்தியப் பிராந்தியங்களிலிருந்து பரவியதெனக் கூறு வதே பொருத்தமாகும். அசோகன் ஆட்சி யில் சேர, சோழ, பாண்டிய அரசுகளைத் தவிர தென்னிந்தியப் பிராந்தியங்கள் மௌரியப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட் பட்டிருந்தது. இங்கெல்லாம் அசோகன் ஆட்சிக்கு முன்னரே பௌத்த மதக் கருத் துக்கள் பரவிவிட்டன. அத்துடன் அசோ கனுக்குப் பின்னர் பௌத்த மதத்தை பேணிப் பாதுகாத்து பிறநாடுகளுக்கு பரப் பியபெருமை தென்னிந்திய சிறப்பாக ஆந் திர, தமிழ்நாட்டு அரசர்களுக்கு உரியன. ஆந்திராவில் உள்ள அமராவதி, நாகர் சுணகொண்டா, பட்டிபுரோலு போன்ற இடங்களும் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சி, காவேரிப் பூம்பட்டினம், புத்தகாஞ்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங் களும் முக்கிய பௌத்தமையங்களாகத் திகழ்ந்தன. இங்கு வாழ்ந்த பௌத்தகுரு மார் இலங்கை சென்று பௌத்த மதத்தைப் பரப்பிய அதேவேளை இலங் கையைச் சேர்ந்த பௌத்த குருமார் பலர் இங்கு வந்து பௌத்த கல்வியைக் கற்றனர்.

அசோகன் ஆட்சிக்குப் பின்னர் பௌத்த மதம் பல பிரிவுகளாகப் பிரிந் தது. இவற்றுள் தேரவாத பௌத்தமும், மகாயான பௌத்தமும் இலங்கையில் பக்கம் பக்கமாக வளர்ச்சியடைந்தன. இவை வளர்வதற்கு இலங்கை, தமிழ்நாட் டோடும், ஆந்திராவோடும் கொண்டிருந்த உறவே காரணமாகும். ஆந்திராவில் மகா யான பௌத்தத்தை வளர்த்தபெருமை அஸ்வகோசர், நாகர்சுனர் ஆகியோருக்கு உரியது. இவர்களுடன் இலங்கையைச் சேர்ந்த பௌத்ததுறவிகள் நெருக்கமான உறவை வைத்திருந்தனர்.

இவர்களுள் நாகர்சுனரின் மாணவரான ஆரியதேவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க வர் இவரைச் சந்தித்த நாகர்சுனர் எனக்குப் பின் என் அணையாவிளக்கைப் பெற்று அதைக் காக்கும் பொறுப்பை உன்னிடம் தருகின்றேன் எனக்கூறியதாக சீனயாத்தி ரிகரான யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளார். நாகர்சுணகொண்டா என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இங்குள்ள பௌத்தவிகாரையில் இலங்கை, தமிழ்நாடு, கலிங்கம் ஆகிய இடங்களில் இருந்து வந்த பௌத்த துறவிகள் கல்வி கற்றதாகக் கூறுகின்றது. இங்கு கண்டெடுக்கப்பட்ட கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்குரிய இன் னொரு கல்வெட்டு போதிஸ்ரீறி என்ற

## வெளிச்சம்

பெண் இலங்கைப் பௌத்தர்களுக்காக நாகர்சுண கொண்டாவில் விகாரை கட்டியதாகக் கூறுகிறது. இத்தொடர்பு நீண்ட காலத்திற்கு நீடித்ததை இலங்கையில் கண்டி என்ற இடத்தில் கிடைத்த கி. பி. 1344ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. இக் கல்வெட்டு இலங்கை மன்னன் தர்மகீர்த்தி என்பவனால் அமராவதியில் பௌத்த சிலையகம் ஒன்று திருத்திக் கட்டப்பட்டது பற்றிக் கூறுகின்றது.

இலங்கையில் பௌத்த மதம் தோன்றி வளர ஆந்திரபிரதேசத்தைவிட தமிழ்நாடு ஆற்றிய பங்களிப்பு அரியது. தமிழ்நாட்டில் கி. பி. 6ஆம் நூற்றாண்டு வரை பௌத்தமதம் செல்வாக்குடன் திகழ்ந்தது. பல்லவர், பாண்டியர் ஆட்சியில் ஆழ்வார், நாயன்மார் தலைமையிற் பக்தி இயக்கம் தோன்றி வளர பௌத்தமதத்தின் செல்வாக்கிற்கான எதிர்ப்புணர்வே காரணம். ஆயினும் இவ்வம்சங்களின் ஆரம்பகால மன்னர் சிலர் பௌத்தர்களாகவே இருந்தனர். இதனால் தமிழ்நாட்டின் நீண்ட கால வரலாற்றில் தமிழ்ப் பௌத்தம் செல்வாக்குடன் திகழ்ந்தது. இவற்றை சிலப்பதிகாரம். மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, தேவாரம், பெரியபுராணம், பாளி உரைநூல்கள், மேல் நாட்டார் குறிப்புகள் என்பன உறுதிப்படுத்துகின்றன இதனால் தமிழ்நாட்டுடன் பாரம்பரிய உறவு கொண்டிருந்த இலங்கையிலும் தமிழ் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மகிந்தன் தலைமையில் அசோகன் அனுப்பிய தூதுக்குழு வட இந்தியாவில் இருந்து ஆகாயமார்க்கமாக இலங்கை வந்தடைந்ததாக மகாவம்சம் கூறுகிறது இது மகாவம்சத்தின் கட்டுக்கதை என்பது வரலாற்றறிஞர்களின் கூற்றாகும். மகிந்தன் காவேரிப் பூம்பட்டினத்தில் தங்கியிருந்து ஏழு விகாரை கட்டியதாக வரலாற்று மரபுண்டு. மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியநூல்களில் காவேரிப் பூம்பட்டினத்தில் இருந்த விகாரை பற்றிக் குறிப்புண்டு. அண்மையில் இங்கு நடத்திய அகழ்வாய்வில் காலத்தால் முந்திய விகாரையின் அழிபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது மகிந்தன் கட்டிய விகாரை என்பது தொல்லியளாரின் கருத்தாகும், இதனால் மகிந்தன் தலைமையிலான தூதுக்குழு தமிழ் நாட்டினூடாக இலங்கைக்கு பௌத்த மதத்தைப் பரப்பியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாகிய காலம் தொட்டு தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை தொல்பொருட் சன்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட ஆரம்ப கால பௌத்த துறவிகளது குகைகளின் அமைப்பும், அதில் பொறிக்கப்பட்ட ஓரிரு வரி வடிவங்கள் கொண்ட சாசனங்களும் தமிழ்நாட்டு பௌத்த குகை அமைப்புக்களை அப்படியே ஒத்துள்ளன. இவ்வொற்றுமையை அசோகன் கால பௌத்த குகைகளில் காணமுடியாது. இலங்கையில் அநுராதபுரம், பெரியபுளியங்குளம், குடுவில் ஆகிய இடங்களில் கிடைத்த கி. மு. 3ஆம், 2ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டு வர்த்தகர்கள் இங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளுக்கு தானம் அளித்தாகக் கூறுகின்றன. அதேபோல தமிழ்நாட்டுக்கு சென்ற இலங்கையை சேர்ந்த தமிழ் வர்த்தகர் அங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளுக்கு தானம் அளித்ததாக திருப்பரங்குன்றம், குடுமியாமலை கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் இலங்கையில் தமிழர் தொடர்பாக கிடைத்த கலவெட்டுகள் பௌத்த துறவிகளுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றி விரிவாகக் கூறுகின்றன.

இலங்கையில் அரசியல் குழுக்குழப்பங்கள், உணவுப் பஞ்சங்கள் ஏற்படும் காலங்

களில் எல்லாம் இங்கு வாழ்ந்த பௌத்த குருமார் தமிழ்நாடு சென்று அங்கு தங்கி விட்டு மீண்டும் இங்கு வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. கி. பி. 2ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கூறப்படும் மணிமேகலையில் காவேரிப்பூம்பட்டினப் பௌத்தப் பள்ளியின் தலைவரான அறவண அடிகள் வட இலங்கையில் உள்ள நாகதீபத்திற்கும், மணிபல்லவத்திற்கும், தென்னிலங்கையில் உள்ள சிவனொளிபாத மலைக்கும் சென்று அங்கிருந்த பாதபீடிகையை தொழுததாகக் கூறப்பட்டுள்ளது. மகாசேனன் ஆட்சியில் சோழநாட்டு தமிழ்பௌத்த பிக்குவான சங்கமித்திரர் இலங்கை வந்து மகாயான பௌத்த மதத்தைப் பரப்பியதாக மகாவம்சம் கூறுகிறது. இவரின் ஆலோசனைப்படி மகாசேனமன்னன் தேரவாத பௌத்தத் தலைமைப்பீடமான மகாவிகாரையை இடித்து மகாயான பௌத்தத்தின் தலைமைப்பீடமான அபயகிரி விகாரையைக் கட்டினான். கி. பி. 5ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இருந்து வந்த புத்தகோசர், தர்மபால, புத்ததத்த, சுமதி, ஜோதிபாலா போன்ற தமிழ்நாட்டுப் பிக்குகள் இலங்கையில் உள்ள விகாரைகளில் பல காலம் தங்கியிருந்து பௌத்த போதனைகளை நடத்தியதாக சூளவம்சம் கூறுகின்றது. இவர்களால் பாளி சிங்களமொழியில் எழுதப்பட்ட பௌத்த உரை நூல்களை இலங்கைப் பௌத்தர்கள் பெரிதும் போற்றினர். இக்காலப் பகுதியில் ஆறு தமிழர்கள் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. இவர்களில் பரிண்ட, தாதிகன் ஆகியோரின் ஆட்சி தென்னிலங்கையில் பரவியதை அறகம, கதிர்காமம் ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. அத்துடன் இக்கல்வெட்டுக்கள் இவர்கள் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றியும் கூறுகின்றது.

கி. பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தினால் தமிழ்பௌத்தம் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இதனால் தீவிர தமிழ்பௌத்தர் இலங்கையில் வந்து குடியேறினர். இருப்பினும் கணிசமான அளவிற்கு தமிழ் பௌத்தம் பல்லவர் ஆட்சியில் இருந்து சோழர் ஆட்சிக்குப் பின்னரும் இருந்ததற்கு சான்றுகள் உண்டு. கி. பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன யாத்திரிகரான யுவான்சுவாங் 300 இலங்கைப் பிக்குகளை காஞ்சிபுரத்தில் சந்தித்ததாகக் கூறுகிறார். இக்காலத்தில் மகாயான பௌத்தத்தை பரப்புவதில் தீவிர அக்கறை காட்டிய வஜ்ரபோதி என்பவர் இலங்கையிலும் சீனாவிலும் பௌத்த மதப் பரப்பக் காரணமாக இருந்தார். திரியாய், குச்சவெளி போன்ற இடங்களில் கிடைத்த பல்லவர்கால கல்வெட்டுகள் 6ஆம் நூற்றாண்டின் பின்னரும் தமிழ்நாட்டில் இருந்து மகாயான பௌத்தம் பரவியதை உறுதிப்படுத்துகின்றது. தமிழ்நாட்டில் நாகபட்டினத்தில் உள்ள சூடாமணி விகாரை கி. பி. 10ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தமிழ்ச்சாசனத்துடன் கூடிய சோழர்கால புத்தர், போதிசத்துவர் ஆகியோருக்குரிய வெணகல விக்கிரகங்கள் கண்டுபிடிககப்பட்டுள்ளன. இவ்வகை விக்கிரகங்கள் இலங்கையிலும்கிடைத்துள்ளன. இலங்கையிற் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இதுவரை 25 தமிழ்க் கல்வெட்டுக்கள் பௌத்த மதம் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் ஒரு கல்வெட்டு இராசராசசோழனால் திருகோணமலையில் இராசராசப் பெரும்பள்ளி என்ற பெயரில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டதாகக் கூறுகிறது. இவற்றில் இருந்து சோழர் ஆட்சிக் காலத்திலும் தமிழ்ப் பௌத்தம் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்ததைக் காணமுடிகிறது.

இன்று பௌத்தமதமும், பௌத்த கலாச்சாரமும் சிங்கள மக்களுக்குரியதாக உள்ளது. ஒரு காலத்தில் தமிழ்நாட்டைப் போல் இலங்கையிலும் தமிழர்களின் ஒரு பிரிவினர் பௌத்தர்களாகவும் சிங்கள மக்களில் ஒரு பிரிவினர் இந்துக்களாகவும் இருந்துள்ளனர். அநுராதபுர அரசில் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறி மாறி ஆட்சி புரிந்ததாக தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்கள் கூறுகின்றன. தமிழ் மன்னர்களில் சிலர் பௌத்தர்களாக இருந்தும் சில தமிழ் மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்தும் ஆட்சி செய்துள்ளனர் என இந் நூல்கள் கூறுகின்றன. இதனால் இன்றைய தமிழ் மக்களின் ஒரு பிரிவினரின் மூதாதையினர் தமிழ் பௌத்தர்களாக இருந்தனர் எனக் கூறலாம். இதையே தமிழர் பிராந்தியங்களில் காணப்படும் பௌத்த எச்சங்கள் உறுதிப்படுத்துகின்றன. கி. பி. 9ஆம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சோழர் ஆட்சியும் தமிழ்நாட்டைப் போல் இலங்கையிலும் தமிழ்ப் பௌத்தம் வலுவிழக்க காரணமாயின. □□

**வெளிச்சம்**
**உலகெங்கும் ஒளிபரப்பட்டும்**

- தேங்காய்
- கொப்பறா
- பொச்சுமட்டை

**இவற்றை மொத்தமாக ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்**

**ந. சண்முகவேல்**
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

# மனித நேயம்



**வரதர்**

கணபதி ஐயர் தமது வீட்டு விறாந்தையில் படுத்திருந்தார். நேரம் இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும். பிள்ளையார் கோயிலை ஒட்டினாற் போலவே அவருடைய வீடும் இருந்தது.

கோயிலில் மாலைக் காலப் பூசை முடிந்து, இரவு ஏழு மணிக்கே கதவுகளும் பூட்டியாயிற்று. வைகாசி மாதம். மெல்லிய இளங் காற்று, பக்கத்தில் நின்ற பெரிய வேப்பமரத்தின் இலைகளுக்கூடாக வீசியது சுகமாக இருந்தது. விறாந்தையில் படுத்தால்தான் அந்தக் காற்றின் சுகத்தை அனுபவிக்க முடியுமென்பது ஐயருக்குத் தெரியும்.

எங்கேயோ நாலைந்து துவக்குச் சூட்டுச்சத்தங்கள் கேட்டன. மிகத் தூரத்தில் ஷெல் அடிக்கும் சத்தங்களும் இடைக்கிடை கேட்டன.

இப்போதெல்லாம் இந்தச் சத்தங்கள் சர்வ சாதாரணம். இவற்றைப் பொருட்படுத்தாமல் ஐயர் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். ஐயருக்கு இன்னமும் நித்திரை வரவில்லை. அன்று பின்னேரம் மூர்த்தி மாஸ்ரர் வீட்டுக்கு அவர் போயிருந்த சமயம் இளங்கோவும், அவன் மனைவி வடிவழகியும் அங்கே வந்திருந்தார்கள்.

அங்கே கதைத்த பல வித விஷயங்களையும் ஐயர் மீட்டெடுத்துச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவற்றுக்கிடையில் 'ஆமி'க்காரர் சில நாட்களாகச் செய்து வரும் அட்டூழியங்களும் ஐயரின் சிந்தனையில் வந்து போயின. 'பிள்ளையாரே, இதுகளுக்கெல்லாம் நீதான் ஒரு முடிவு செய்ய வேணும்' என்று நினைத்துக் கொண்ட ஐயரின் கண்களை மயக்கிக் கொண்டு, நித்திரை வந்தது.

ஐயர் சற்றே கண்ணயரவும், 'தடதட' என்று யாரோ ஓடி வரும் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது. திடுக்கிட்டவராய் ஐயர் எழுந்து படுக்கையிலேயே உட்கார்ந்தார். நெஞ்சு படபடத்தது.

நல்ல இருட்டு. பக்கத்திலிருந்த 'ரோச் லயிற்'றை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டார். ஆனால் அதை அடிக்கவில்லை. நெஞ்சின் படபடப்பு சற்ற அமைதியானதும், 'ஆரது?' என்று குரல் கொடுத்தார் ஐயர்.

இருட்டினூடாக இரண்டு உருவங்கள் சமீபத்தில் நிழலாடின. ஐயருக்கு நெஞ்சில் பயம் நிறைந்து விட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு 'ஆரது?' என்று மீண்டும் கேட்டுக் கொண்டே 'லயிற்'றை அடித்தார்.

இரண்டு உருவங்கள் பக்கத்தில் வந்து நின்றன. நீளக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார்கள். ''ஐயா லயிற் அடிக்க வேண்டாம். அது நாங்கள்தான். பயப்பட வேண்டாம்'' என்றான் ஒரு இளைஞன்.

ஐயர் உடனே லயிற்றை நிறுத்தி விட்டு, ''ஆர் தம்பியவை? தெரியேல்லை'' என்றார்.

''ஐயா நாங்கள் இயக்கம். என்னை உங்களுக்கும் தெரியும். நான் முத்தையா செல்லையாவின்ரை மகன். இவன் சுந்தரம். இவனும் இயக்கந்தான்... ஐயா, ஆமிக்காரர் எங்களைத் துரத்திக் கொண்டு வாறாங்கள். நாங்கள் வளவுகளுக்குள்ளாலை இறங்கி ஓடி வாறம்... இங்கையும் இக்கணம் வந்து விடுவார்கள். கோயிலைத் திறந்து விட்டால் நாங்கள் உள் வீதியிலே வாகன சாலைக்குள்ளை போய் ஒளிஞ்சு கொள்ளலாம்...''

ஐயர் ஒரு கணம் ஒன்றும் பேசாமல் இருந்தார். பிறகு, தலைமாட்டிலிருந்த திறப்புக் கோர்வையைக் கையிலெடுத்துக் கொண்டு '' வாருங்கோ '' என்று சொல்லிக் கொண்டே கோயில் வாயிலை நோக்கி நடந்தார். முன் கதவைத் திறந்து கொண்டு மூவரும் உள்ளே போனார்கள். முத்தையாவும் சுந்தரமும் தெற்கு வீதியிலிருந்து வாகன சாலையை நோக்கி நடக்க .......... ''இஞ்சை வாருங்கோ தம்பியவை! அவங்கள் வந்து தேடினா உது வழியை நீங்கள் அகப்பட்டுப்போவியள்.............

இஞ்சைவாருங்கோ''என்று சொல்லியபடி ஐயர் கோயிலுக்குள் நடந்தார். இளைஞர்களும் திரும்பி ஐயரின் பின்னால் போனார்கள்.

ஐயர் மூலத்தானக் கதவைக் திறந்து, '' தம்பியவை, நீங்கள் இதுக்குள்ளே போயிருங்கோ. தற்செயலாய் வாசல் கதவு திறக்கிற சத்தம் கேட்டால் சாமிக்குப் பக்கத்திலை போய் இரண்டு பக்கத்திலையும் மறைவாய் நிண்டு கொள்ளுங்கோ... பிள்ளையார் இருக்கிறார். பயமில்லை'' என்றார். முத்தையா உள்ளே போகக் காலை எடுத்துவைத்தான். சுந்தரம் அவன் கையைப் பிடித்து நிறுத்தி, அவன் காதுக்குள் ஏதோ குசுகுசுத்தான். முத்தையா 'சீ வாடா' என்று இழுத்துக் கொண்டு உள்ளே போனான்.

''சரியான இருட்டு. இந்தா தம்பி, இந்த லயிற்றையும் வைச்சுக் கொள்ளுங்கோ. இருட்டிலை எதையும் தட்டிக்கிட்டிச் சத்தம் போட வேண்டாம் .. நான் வாறன்'' என்று கூறிய ஐயர் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு வெளியே வந்து முன்பு படுத்திருந்த விறாந்தைக்குப் போய் திரும்பவும் படுத்துக்கொண்டார். நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது. இனிநித்திரை வராது. நித்திரையாய்க் கிடப்பது போலக் கிடக்க முயற்சித்தார் ஐயர்.

கோயிலுக்குள் பூட்டப்பட்ட முத்தையாவுக்கும் சுந்தரத்துக்கும் முதலில் ஒன்றுமே தெரியவில்லை. ரோச் லயிற்றை ஒரு தரம் அடித்து இடத்தை நிதானித்துக் கொண்டார்கள். சுந்தரம் மெதுவான குரலில் சொன்னான்; ''எனக்கென்னவோ யோசினையாய்க் கிடக்கு''

''எதுக்கு?''

''கொஞ்ச நாளைக்கு முந்தி இந்த ஐயரோட வாக்குவாதப் பட்டனாங்கள்ளலே? .. ....''

கொஞ்ச நாட்களுக்கு முன்பு.

அப்போது அந்தப் பிள்ளையார் கோயிலில் திருவிழாக் காலம்.

''ஐயா, திருவிழாவுக்கு ஒவ்வொரு நாளும் பிரசங்கம் நடக்கப்போகுது போலை......'' என்றான் முத்தையா.

''ஓமோம். இராமாயணக் கதை. தொடர்ச்சியாகப் பேசப் போறார் சிவகுமாரன். நல்லாய்ப் பேசுவார்''என்றார் ஐயர். ''ஆர் பேசினா என்ன,

ராமாயணக்கதைதானே?''

''மனிசன் எப்படி வாழ வேண்டுமென்பதை கம்பர் வடிவாய்ச் சொல்லியிருக்கிறாரெல்லோ?''

''நல்ல கதை. இல்லையெண்டு நான் சொல்ல வரவில்லை ஐயா. ஆனால் அது வடஇந்தியாவிலிருந்து வந்த ஆரியன், இலங்கையிலிருந்த திராவிட அரசன் இராவணனை அழித்ததைப் பற்றி சொல்கிற கதையெல்லோ?''

ஐயா சிரித்தார். பிறகு ''நான் பிராமணன் எண்டதால் ஆரியன் வெண்ட கதையை ...... '' என்று சொல்லத் தொடங்க, முத்தையா குறுக்கிட்டான்.

''இல்லை ஐயா. உங்களை நான் இதுக்குள்ளே இழுக்கேல்ல...... எங்கடை ஊரிலே இருக்கிற பிராமணரெல்லாம் ஆயிரக் கணக்கான வரியமாய் திராவிடராய்த்தான் இருக்கினம். அதிலையும் நீங்கள்...... ''

மீண்டும் முத்தையா ஏதோ சொல்ல முனைய, சுந்தரம் இடைமறித்து. '' முத்தையா, உந்தக் கதையெல்லாம் இப்ப கோயிலடியிலை என்னத்துக்கு? ...... உதுகளை வேறை எங்கையாலும் மேடையளிலே பேசலாம். வாடா!''என்று முத்தையாவை இழுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

வெளியே வந்ததும் ''என்னடா ஐயரோட போய் உந்தக் கதையெல்லாம் கதைக்கிறாய்? அவர் ஏதும் பிழையாய் நினைக்கப் போறார்'' என்றான் சுந்தரம்.

''போடா, உனக்கு ஐயரைப் பற்றி ஒண்டும் தெரியாது. அவர் ஒண்டும் பிழையாய் நினைக்க மாட்டார்'' என்றான் முத்தையா.

பூட்டப்பட்ட மூலத்தான அறைக்குள்ளிருந்த முத்தையாவுக்கு ஐயரோடு அன்று ஏற்பட்ட வாக்குவாதம் நினைவுக்கு வர''சுந்தரம், நீ சும்மா தேவையில்லாமல் யோசிக்காதை. இதுகளொண்டையும் ஐயர் பெரிசா எடுக்க மாட்டார்'' என்றான்

''நீ என்ன சொன்னாலும் ஐயருக்கு அடிமனசுக்குள்ளை எங்களோடை கறள் இருக்கும். அது மட்டுமில்லை என்னையும் அவருக்கு இன்னாரெண்டு தெரிஞ்சிருக்குமெண்டு நினைக்கிறன். கோயிலுக்குள்ளை நுழையக் கூடாத சாதியில் பிறந்தவன், இப்ப மூலத்தானத்துக்குள்ளை போய் நிக்கிறானே, எண்ட காய்வும் இருக்கும். இதுதான் சமயமெண்டு ஐயர் காட்டிக் குடுத்தா......''

''சீ விசரா, உனக்கு எப்பவும் தாழ்வு மனப்பான்மை ..... விசர்க்கதை கதைக்காதை. ஐயர் அப்படியான ஆளில்லையெண்டு உனக்கு எத்தினை தரம் சொல்கிறது.?''

''அது மட்டுமில்லையடா, அவங்கள் வந்து ஐயருக்கு இரண்டு தட்டுத் தட்டினா . . ஐயர் அவிட்டு விட்டுவிடுவார்...... நாங்களும் பூட்டின அறைக்குள்ளே ஆப்பிட்டுக் கொண்டம். ''

''சுந்தரம் நான் கரண்டி. சும்மா யோசிக்காதை. ஐயராலை ஒரு ஆபத்தும் வராது. ஐயரை அவங்கள் அடிச்சுக் கொண்டாலும் ஐயர் எங்களைக் காட்டிக் குடுக்க மாட்டார்...... எனக்கு ஐயரை நல்லாய்த் தெரியும்'' என்றான் முத்தையா.

● ●

தமது பாயில் நீட்டி நிமிர்ந்து நித்திரையாய்க் கிடந்த கணபதி ஐயர் எதையோ நினைத்தவராய் திடுக்கிட்டு எழுந்தார். கோயில் வாசலை நோக்கிப் போய் எதையோ காலால் தடவிப் பார்த்தார். பிறகு 'மோட்டுப் பொடியள்' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு அங்கே கிடந்த இரண்டு சோடிச் சப்பாத்துக்களையும் எடுத்துக் கொண்டு போய்த் தேருக்கும், தேர் முட்டிக்குமிடையில் மறைவாய்ப் போட்டு விட்டு வந்தார். மீண்டும் ஐயர் படுக்

கையில் படுத்துக் கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் தூரத்தே வாகனம் வரும் சத்தம கேட்டது. ஐயருக்கு உடம்பு லேசாகப் பதறத் தொடங்கியது. ' பிள்ளை யாரே ' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டார். 'ஏதோ வாறது வரட்டும்' என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டார்.

வாகனத்தின் இரைச்சல் கிட்டக்கேட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் வாகனத்தின் பிரகாசமான வெளிச்சம் பிள்ளையார் கோயிலின் முன் பக்கத்தில் விழுந்தது. வாகனத்தை நிறுத்திவிட்டு நாலைந்து பேர் இறங்கி வந்தார்கள். அவர்களில் ஒருவன் துப்பாக்கியை உயர்த்தி கோயிலை நோக்கிக் குறி வைத்தபடி வந்தான். வாகன வெளிச்சத்தில் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஐயர் அவர்கள் கிட்ட வருவதைக் கண்டதும், கண்களை மூடிக்கொண்டு 'நித்திரை' யாய்க கிடந்தார்

ஐயர் ' நித்திரை.'

'' ஓய்! ''

ஐயர் நல்ல நித்திரை. ஒருவன் துப்பாக்கி முனையினால் ஐயரின் தோளில் லேசாகத் தட்டி '' ஓய் ஓய், எழும்பு ஓய் '' என்று மீண்டும் எழுப்பினான்.

ஐயர் 'நல்ல நித்திரை' யிலிருந்து எழும்பி மிரள, மிரள விழித்தார்.

'' இந்தப்பக்கம் இரண்டு பேர் வந்தாங்களே, அவங்கள் எங்கே ஓய்'' ?

ஐயர் அப்பாவித் தனமான முகபாவத்தோடு '' நான் ஒருத்தரையும் பாக்கெல்லை. நித்திரையாய்க் கிடந்தன் '' என்றார்.

ஒருவன் ரோச் லயிற்றை அடித்துக் கோயிலின் அந்தப் பக்கத்தையும் இந்தப்பக்கத்தையும் பார்த்தான். கோயிலின் முன் வாசற் கதவு பூட்டி பெரிய ஆமைப்பூட்டும் போடப் பட்டிருந்தது.

'' வீட்டுக்குள்ளே ஆர் இருக்கிறது? ''

'' என்ரை மனைவி மட்டுந்தான் ''

'' நாங்கள் வீட்டுக்குள்ளை பார்க்க வேணும். எழும்பும் ஓய்! ''

ஐயர் எழும்பி வீட்டுக் கதவைத் திறந்தார். வெளியில் சத்தம் கேட்டு சற்று முன்னர் எழுந்திருந்த ஐயரின் மனைவி லாம்பை ஏற்றிக் கொண்டு கதவுக்குப் பின்னால் நின்றார். மனைவியிடம் லாமபை வாங்கிக்கொண்டு ஐயர் முன்னே போக, ஒரு இராணுவத்தானும் பின்னே போனான். அறையைக் திறக்கச் சொல்லி லயிற்றை அடித்துப் பார்த்தான். குசினிக்குள்ளும் போனான். அவனுடைய சப்பாத்துக் கால் படாத இடமே வீட்டில் இல்லை. ' அடுத்த நாள் வீடு முழுக்கக் கழுவித் துடைக்க வேண்டுமே' என்று நினைத்து ஐயரின் மனைவி கவலைப்பட்டார்.

சோதனையை முடித்துக் கொண்டு இராணுவத்தானும் ஐயரும் வெளியே வந்தனர்.

தாங்கள் தேடும் ஆட்கள் அங்கே இல்லையென் பதில் இராணுவத்தினருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. '' சரி, சரி நீ போய் படும் ஓய்! '' என்று ஐயருக்குச் சொல்லிவிட்டு இராணுவத்தினர் தமது வாகனத்தை நோக்கிச் சென்றனர். சிறிது நேரத்துக்கெல்லாம் வாகனம் இரையும் சத்தம் கேட்டது. கோயிலை நோக்கியிருந்த லயிற் வெளிச்சம் மறுபுறம் திரும்பிற்று. வாகனம் வடக்குப் பக்கமாக வேகமாக சென்று மறைந்தது.

ஐயர் ஒரு சில நிமிடங்கள் படுக்கையில் உட்கார்ந்திருந்தார்.

வாகனத்தின் சத்தம் முற்றாக மறைந்து விட்டது.

ஒரு வேளை வாகனத்தை அனுப்பி விட்டு யாராவது ஒருவன் இங்கே நிற்கிறானா? என்று ஒரு சந்தேகம் ஐயர் மனதில் எழுந்தது. மேலும் சில நிமிடம் படுக்கையில் உட்கார்ந்து இருந்து வாகனம் நின்ற இடத்தை இருட்டில் கண்களால் துளாவினார்.

ஒன்றும் தெரியவில்லை 'சே அப்படி நிற்கமாட்டாங்கள். அவங்களுக்கும் பயம் இருக்கும்' என்று தெளிந்தவராய் கோயிலின் திறப்புக்களை எடுத்துக் கொண்டு போய் வெளிக் கதவைத் திறந்தார்.

உள்ளே போய் மூலத் தானக் கதவையும் திறந்து ''தம்பியவை'' என்று கூப்பிட்டார்.

ஒரு சத்தமும் இல்லை

''அவங்கள் போய் விட்டாங்கள், இனி நீங்கள் வாருங்கோ.'' என்றார் ஐயர்.

முதலில் ரோச் லயிற் வெளிச்சம் வந்தது. தமது கண்களைக் கையினால் மறைத்துக் கொண்டே ''சரி சரி வாருங்கோ'' என்றார்.

முத்தையாவும் சுந்தரமும் ஐயருக்குக் கிட்ட வந்தார்கள்

''பிள்ளையார் இண்டைக்கு உங்களைக் காப்பாத்திப் போட்டார்'' என்றார் ஐயர்.

''ஐயா! நீங்க தான் எங்களைக் காப்பாத்தினீங்கள்'' என்று சொல்லிக் கொண்டே இருவரும் ஐயரை வணங்கினார்கள். ''சீ இதென்ன இது! வாருங்கோ போவம்'' என்று அவர்களைக் கூட்டிக்கொண்டு ஐயர் வெளியில் வந்தார்.

நடந்த நிகழ்வுகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்லி விட்டு ''உங்கடை சப்பாத்துக்களை கோயில் வாசலில் கழட்டி விட்டுப் போயிட்டியள். அவங்கடை கண்ணிலை பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?...... நல்ல வேளை நான் கண்டெடுத்துக் கொண்டுபோய் தேர் முட்டிக்குப் பக்கத்திலை போட்டிருக்கிறன். போய் எடுத்துக் கொண்டு வாருங்கோ', என்று ஐயர் சொல்லவும், இருவரும் திடுக்கிட்டவர்களாய் 'அய்யய்யோ... நல்ல வேளை ஐயா. அவசரத்திலை எங்களுக்குப் புத்தி கெட்டுப் போச்சு'' என்றார்கள். பிறகு இரண்டு பேரும் ரோச் லயிற் வெளிச்சத்தில் போய் சப்பாத்துக்களை எடுத்து வந்தார்கள்.

'நல்லாய் களைச்சுப் போனியள் ... இளனி கிடக்கு. ஆளுக்கொரு இளனி குடிச்சிட்டுப் போகலாம். வாருங்கோ'' என்ற ஐயர் அவர்களை விறாந்தையில் இருத்திவிட்டு வீட்டுக்குள் போய் இரண்டு நல்ல செவ்விளநீர்க் குரும்பைகளையும் கத்தியையும் எடுத்து வந்தார்.

இளநீரைக் குடித்துக் கொண்டே முத்தையா சொன்னான்; ''ஐயா இவன் இஞ்சை வர முதலிலை பயப்பிட்டவன். எனக்கு ஐயா கைவிடமாட்டாரென்ற நம்பிக்கை இருந்தது. என்ரை நம்பிக்கையைக் காப்பாத்திப் போட்டியள், ஐயா. உங்களுக்கு எப்படி நன்றி சொல்கிறதென்றே தெரியேல்லை'' என்றான். சுந்தரம் ''ஐயா என்னை மன்னிக்கவேணும். உண்மையா நான் உங்களைப் பிழையாய் விளங்கிப் போட்டன். இருந்தாலும் என்னை நீங்கள் சரியாத் தெரிஞ்சிருந்தால் .. நான் ஆர், என்ன சாதி எண்டு தெரிஞ்சிருந்தா ..''

''தெரிஞ்சிருந்தா என்ன தம்பி... எனக்கு உம்மைத் தெரியும். நீர் ஆரெண்டும் தெரியும், சின்னவியின்ரை பேரனெல்லே நீர்?''

''அய்யய்யா., — நல்லாத் தெரிஞ்சுமா .. மூலத்தானத்துக்குள் என்னை போக விட்டனீங்கள்?''

''ஓமோம். எல்லா ஆசாரத்துக்கும் மேலானது மனிதநேயம். நானும் கடவுளின்ரை பிள்ளை, நீரும் கடவுளின்ரை பிள்ளை. ஆபத்து வேளையில் ஆசாரத்தை விட மனித நேயம் தான் முக்கியம். பிள்ளையாரும் இதுக்கு மாறாயிருக்க மாட்டார். என்ன முத்தையா?'' என்று ஐயர் முத்தையாவின் பக்கம் பார்த்தார். □□

குறுநாவல்

# பறக்கும் நினைவுகள்

சாந்தன்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

விமானம் பற்றிய சந்தோஷமான அனுபவங்கள் கிட்டுவது நின்றபிறகு - இன்னும் வடிவாகச் சென்னால், விமானந் தருகின்ற பயமான, பயங்கரமான அனுபவங்களை அறிய நேர்ந்த பிறகு தான், பறக்கும் கனவுகள் வர ஆரம்பித்தன. இரண்டு வெளிநாட்டுப் பயணங்களுக்கும் இடைப்பட்ட அந்த நாலாண்டுகளுக்குள்ளே முதன்முதலாய் விமானம் புதுக்கோலம் காட்டிற்று.

வகுப்பு முடிந்து லைப்றறிப் பக்கம் போய்க் கொண்டிருந்தபோது, விஜயகுமார் துரத்தியபடி பின்னால் ஓடி வந்தான்.

''இதைக் கொண்டு போய்ப் படிச்சிட்டுத் தாங்கோ, ஸேர்.........''

விஜயகுமார் கடைசி ஆண்டு மாணவன். இப்படி விஷயங்களில் ஒரு சகர் ஆகிவிட்டவன்.

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு. நிறைய விளக்கப் படங்களுடன் சிறிய புத்தகம். பயமாயிருந்தது. ''இது எதுக்கு? ... இதுவும் வரப்போகுதா? ...''

அன்று,அதன்பிறகு,மனம் லேசாகக் குழம்பிவிட்ட மாதிரி இருந்தது. சொந்த நாடு என்று சொல்கிற எல்லைக்குள்ளேயே ஒரு அரசாங்கம் குண்டு வீசுமா? இருக்காது ...

ஆறுதல் கொள்ள முயன்றான்.

மாலை, வீட்டுக்குப் போய், அன்றைய களைப் பெல்லாந் தீர ஆறுதலாகத் தோய்ந்து கொண்டிருந்தபோது, ஷவரின் இரைச்சலையும் மீறி இன்னொன்று லேசாக, குளியலறையின் மேற்புற ஃபான் லைற் ஊடாக நழுவிக் கொண்டிருந்த நாலு விமானங்கள். வலு உயரே வண்டுகள் போல பலாலிக்குப் போகிறான்கள் .. இப்போது இராணுவ விமானங்கள்தாம் பலாலிக்குப் போகும்.

சவர்க்காரம் போட்டுக் கொண்டிருந்தவன் திடுக்

கிட்டான். கட்டி கை நழுவி விழுந்தது. என்ன சத்தம் அது? இடி இப்படியா இருக்கும்? பெரிய தகர ஷீற் ஒன்று அதிர்ந்தபடி விரைந்து விழுகின்றதான காற்றின் நடுக்கம். அது கேட்டதும் கேளாதது மாய்க் காதைச் செவிடு படுத்துகிற முழக்கம் - குளியலறைச் சுவர்கள் அதிர்ந்தன. கதவு கிடுகிடுத்தது. மேலெங்கும் நுரையோடு, துண்டைச் துண்டைச் சுற்றிக் கொண்டு வெளியே பாய்ந்தான். துரத்தின. கிட்டத்தான், என்ன செய்வது? ஷெல் என்றலாவது கொங்கிறீற் கூரைக்குள் ஒண்டலாம். குண்டுக்கு என்ன செய்வது? வீட்டில் எல்லோருமாய் முன் அறைக்குள் ஓடி அலுமாரியின் பின்னால் இடம் தேடினார்கள். அந்த அறைக்கு நல்ல காலம் கொங்கிறீற் கூரை போட்டிருந்தது. முன் விறாந்தையோடு சேர்த்து காற்றில் கந்தக மணம் கலந்து வரலாயிற்று. அந்த மணம் கரைவதற்குள் பயப் பிரமை தெளிவதற்குள் சேதிகள் தொடர்ந்தன— எத்தனை பேர், என்ன மாதிரி............

அன்றுதான் அரங்கேற்றம். அதன்பிறகு எத்தனை! வீடு, வாசல், பள்ளி, கோயில் குளம் என்று பார்த்துப் பாராமல் எத்தனை உயிர்களை இந்தப் பறவைகள் காவு கொண்டன...... பீப்பாய்க் குண்டு, பீக்குண்டு என்று புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் வேறு! ஒரு மந்திரி, தானே விமானத்தில் வந்து கோவிலின்மேல் பீப்பாய்க்குண்டை உருட்டி விட்டான் என்று சொன்னார்கள்.......

ஒரு பென்னம் பெரிய ரீ. வி. திரையில் பார்ப்பது போல எல்லாந் தெரிந்தன. வானம், நல்ல பளிச்சிட்ட நீலமாயிருந்தது. மேகங்கள் திரைந்து ஆங்காங்கே குவிந்து கிடந்தன. என்றாலும் முதல் நாள் பெய்த மழையில் கழுவுப்பட்டது மாதிரிச் சுத்தமான நீலம். முன்னாலும் பக்கங்களிலும் வயல் வெளி பரந்து கிடந்தது. அறுவடை முடிந்த வெறும் வயல். இடைக்கிடை சணல்பாத்திகள் மஞ்சள் சதுரங்களாய்த் தெரிந்தன. வயல்களைத் தாண்டித் தொடுவானில் பனைநிரைகள், குடிமனைகள்.

காற்று, மெல்லக் குளிர்ச்சியாக வீசியது. சணல் பூ மணத்தை அது கொண்டு வந்தது. வெய்யில் பளிச்சென்று எறித்தது. அண்ணாந்து பார்த்தால், உச்சிக்கு நேரே மேலே நின்று கண்களைக் குத்துகிற சூரியன்.

ஆனால், இவற்றை யெல்லாம் ரசிக்கிற மன நிலையில், இந்தப்பகைப் புலனில், இந்த ஒளிர் நீல வானில், மேகங்களுக்கிடையிலும், பனங்கூடல் உச்சிகளுக்கிடையிலும் மறைந்தும் வெளித்துங் கொண்டு, திரும்புகிற நேரங்களிலெல்லாம் வெய்யிலில் பளபளத்துக் கொண்டு விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஆறு பொம்மர்கள், ஒரு ஹெலி, இல்லை ஐந்துதான் பொம்மர், மற்றது அவ்ரோ என நாகு திருத்தினான். இருக்கலாம். எல்லாமே, இடைவிடாமல் ரீங்கரித்துக் கொண்டு, பெரிய வட்டங்களாக வளைய வந்து கொண்டிருந்தன. அந்த வட்டங்களின் மையம், சுதுமலை, மானிப்பாயாக இருக்கலாம் போலிருந்தது. அவர்கள் நிற்கிற ஊரிலிருந்து நேரே கிழக்காக இருந்தது.

''பட்டணமாக இருக்குமோ?...'' தன்னை ஆறுதல் படுத்திக் கொள்ளக் கேட்டான்.

''இல்லை ஸேர்... பட்டணமெண்டா இன்னும் வயல்பக்கமாகத் தெரியும் அந்தப் பனைக்கு நேரைதான் பட்டணம்...... இது மானிப்பாய்ப்பக்கந்தான்..'' நாகுசொன்னான். ''ஏன் இவ்வளவு பெரிய வட்டமாகப் போடுறாங்கள்?

இங்கை கூட வருகுதே. அந்தா பாருங்கோ......" அன்ரனி, தலைக்குமேல் காட்டினார்.

அண்ணாந்து பார்த்தால், ஒரு பருந்தின் அளவில் பொம்மர் ஒன்று வானத்து உச்சியில் வழுகிக் கொண்டிருந்தது.

எப்படியாவது உடனே வீட்டுக்குப் போய் விட வேண்டுமென அந்தரமாயிருந்தது ஆனால் அது முடிகிற காரியமல்ல. ஹெலி நோட்டமடிக்கிற இடத்திற்குள் மோட்டார் சைக்கிளிற போவதைதவிட தற்கொலைக்குச் சிறந்தவழி வேறிராது .. கூட இருந்தால் நல்லதுதான். என்றாலும் ஆபத்தில் தலைபோட்டுத் தனக்குத் தீங்கைத் தேடிக்கொள்வது யாருக்குமே நல்லதல்ல. வளவில பதுங்குகுழி இருக்கிறது; பயமில்லை...... "அந்தா போடப்போறான் ஸேர், பாருங்கோ..." என்றான், நாகு.

எங்கோ உச்சியில் வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு விமானம் திடீரென நாற்பத்தைந்து பாகை சரிவில் விரைந்து சறுகியது. ஒரு பனை மட்டத்தில் அதன் வயிற்றிலிருந்து ஒரு புகைத்திரள் வந்து கரைய மீண்டும் முன்னே மேலெழுந்தது.

'போட்டிட்டான்கள்' என்றார், அன்ரனி. ஆறேழு விநாடிகளின் பின்னர் சத்தம் வந்து சேர்ந்தது "எங்கட பக்கந்தான்" என்றான், கலங்கிப் போய் "....இண்டைக்கு அம்மன் கோயிலும் கொடியேத்தம் இப்பதான். பன்னிரண்டு மணிக்கு..." பிறகும் ஐந்தாறு சத்தங்கள்.

அடுத்தநாள்தான் சரியானதகவல் தெரிந்தது. இறந்துபோன ஏழுபேரில், ஐயர் ஒருவர். பால்யகால நண்பன் -வகுப்பு சகா- ஒருவன். கொடி ஏற்றவில்லையாம்.

தமிழ்மண் என்பதால் தானே தாம் நினைத்தபடி குண்டுவீச மனம் வந்தது? தங்கள் மண் என்றால் இப்படிச் செய்வார்களா? எங்களிடமும் இந்த விமானங்களிருந்தால் என்று மனம் ஏங்கும்.

இரண்டாம் உலகப் போர்க்காலத்துக் கதைகள் நினைவு வரும். எல்லாவற்றையும் முந்திக் கொண்டு மனதில் வருகிற மாரேஸ்யெவ் விமானப் போரின்போது வீழ்ந்து நொருங்கிக் கால்களை இழந்தாலும், மீண்டும் முயன்று பறந்து போர் புரிந்த அந்த உறுதி... அந்த "உண்மை மனிதனின் கதை" எப்போதும் மனதில் முதலில் வருகிறது......

என்றாலுங்கூட இதையும் மிஞ்சக்கூடிய எத்தனையை எம்மண் கண்டது! இரண்டு கைகளையும் போரில் இழந்தாலும் கால்களாலேயே துப்பாக்கியைத் தயார் பண்ணிவிடுகிற இளம் வீராங்கனை போல் எத்தனை இங்கு! மாரேஸ்யெவ்வின் கதையை எழுத ஒரு பொலவோய் போல இவர்களின் கதைகளை எவரெவர் எழுதுவர்?.........

சண்டை விமானத்திலிருந்து பார்க்கும் போது எதிரி விமானியின் கண்கள் கூட மாரேஸ்யெவ்வுக்குத் தெரிந்ததோ? ஆனால், விஜயகுமார் தந்த புத்தகத்தில், மேலிருந்து பார்க்கும் போது மனிதமுகங்கள் வடிவாகத் தெரியும் என்றும், ஆதலால் அண்ணாந்து ஒருபோதும் பார்க்காதீர்கள் என்று தெளிவாகவே போட்டிருந்தது.

அன்றைக்கு றொக்கற் அடித்த பிளேனில் வந்தவனுக்குத் என்னை எவ்வளவு நன்றாய்த் தெரிந்திருக்கும்? அந்த நிர்வாண நெடும் வெளியில் நான் நிலத்தில் விழுந்து உருண்ட போது சிரித்திருப்பானா? ஒருவன் குறிதேடி அடித்ததில் முனைந்திருந்தாலும் மற்றவன் கண்ணிலாவது

பட்டிருக்காதா? அந்த வெற்றுவெளியில்? நேரே முன்னால்? தனியொரு ஆளை விமானம் குறி பாராது என்று வடிவாகத் தெரிந்திருந்தும் அந்தச்சத் தங்கள் எப்படிக்கிலி கொண்டு புரள வைத்தன அன்று? அவன்கள் தன்னைக் கண்டிருந்தால்? ஆத்திரம் வந்தது தன்மேலும்.

கல்லூரி, தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற கதை இரண்டு வாரங்களுக்கு மேலாகவே இருந்தது. எந்த நேரமும் குண்டுவீச்சை எதிர்பார்க்கலாம். இப்படிக் கதைபரவி நடக்காமலும் போகலாம். என்ன செய்வது? இந்த இடம் ஆபத்து என்பது சரிதான். ஆனால் எந்த இடம் ஆபத்தில்லை? வரட்டும், பார்க்கலாம்... சத்தங் கேட்டாலே வெளியே ஓடிவிட வேண்டும்! வெட்டிய பங்கரெல்லாம்.. தூர்ந்து போயின. எத்தனை தடவைகள். கல்லுப்பாங்கான ஓர் இடத்தில் குளம் போல் நீர் இன்னும் நிற்கிறது. நுளம்பு வருகிறதென்று யாரோ சொன்னதில், நாகு கிணற்று மீன்களைப் பிடித்து விட்டான் அது குளமாகவே ஆகிவிட்டது.

பங்கர் இல்லாவிட்டால் என்ன? நிலத்தில் படுத்துக் கொள்வது. அப்படித்தான் அன்றைக்கும் நடந்தது.

காலையில் வந்து கையெழுத்து வைத்து விட்டு உள்ளே திரும்பும் போது, இவ்வளவு நாளாய் எதிர்பார்த்திருந்த அந்த இரைச்சல் கேட்டது. விழுந்தடித்து வெளியே வந்தார்கள் எல்லோருமாய்.

''இங்கதான்! ... ...''

''நிற்கிறது பிழை....'' சைக்கிள்களை எடுக்க ஓடினார்கள்.

கல்லூரி வளாகம் தனியாயிருந்தது. ஊருக்கு வெளியே பரந்து கிடந்த வயல் நடுவில் ஒருதீவு போல. விமானங்கள் தலைக்கு மேல் வட்டமிட ஆரம்பித்திருந்தன. அந்த உறுமல்கள்! எத்தனைதரம் கேட்டாலும் இன்னமும் பரபரக்க வைக்கிற உறுமல்கள்! எந்த நேரம் எங்கே விழும் என்பது தெரியாததில் வருகிற பரபரப்பு. ''கூட்டமாய் சைக்கிள்கள் போறது ஆபத்து ..'' வயல் நடுவில் நாடாவாய் ஓடுகிற பெருந்தெரு கூட வெளித்துப் போயிருந்தது; ஆளாளாய்ப் பிரிந்தவர்கள். வரம்பாலும் வழியாலும். விமானங்கள் இன்னும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கூடியும், குறைந்தும் வெருட்டுகிற உறுமல்.

''இன்னுங் கொஞ்சம் தள்ளிப் போவம், ஸேர் ..'' என்றான், தயா. அவன் மட்டுந்தான் இப்போது கூட வந்தான்.

பஸ் நிறுத்தத்துக் கொட்டகை தாண்டி, பெருந்தெருவில் ஏறினார்கள். காற்றுக்கூட அடங்கிப்போயிருந்தது. விமான இரைச்சல்களின் வியாபகம். அவை வெய்யிலில் மினுங்கின. தள்ளிப்போனதும் தனியே தெருக்கரையில் ஆட்டிறைச்சி விற்குமிடம் என்ற மங்கிய எழுத்தில் பலகை மாட்டியிருந்த கொட்டிலருகில் காலூன்றி நின்றான், தயா. கடை பூட்டியிருந்தது. கனநாட்களாகவே அப்படித்தானிருந்தது. இறங்கி, தாழ்வார விளிம்போடு அண்டினார்கள். சைக்கிள்களையும் அருகோடு இழுத்துக் கொண்டு நிமிர்ந்தபோது திடுக்கென்றது. கல்லூரிக் கட்டிடம் வலு கிட்டத் தெரிந்தது. இவ்வளவு நாளும் நினைத்தது போல இது பெரும் தொலைவு அல்ல. தப்பித்தவறித் தள்ளி விழுந்தாலும்? அப்படி விழுவதற்கே சாத்தியம் அதிகம்......

'' தள்ளிப்போவம் இன்னும்......''

''ஓம், ஸேர்.... இது சரிவராது ''

உந்தி ஏறிய போது, ஒரு விமானம் சறுகி வந்தது. இரைச்சலே இவர்

களை அமுக்கி விடும் போல. வேறுவழியில்லை, விழுந்தடித்து உழக்கினான். அது நெருங்கி வந்தது. நொடிகள் என்பவை எவ்வளவு பெரியவை! தங்களைக் கண்டு விட்டதோ? தங்களை ஏன் குறிபார்த்திருக்கக் கூடாது? வானமும் பூமியும் ஒன்றாயிருக்கிற இந்த வெளியில் எங்கே மறைவது? வயல்கள் கூட வெட்டு முடிந்து வெறுமையாகக் கிடந்தன.

சத்தம் ஆளை அமுக்கியது. சைக்கிளைப் போட்டதும், போடாததுமாய்க் குதித்தான். தூர்ந்து கொண்டிருந்த கேணி, தெருக்கரையோடு கிடந்தது. தெருவிளிம்போடு தொடங்கி நிலம் சரிந்து நடுவிற்குப் போனது, அந்த இடம் துப்புரவாயுந் தெரிந்தது. சடாரென்று விழுந்து படுத்தான். கட்டின் கறுத்துப்போன கற்கள். விமானம் தாண்டிப் போயிற்று அவசரமென்றால் நடுவிற்கும் போகலாம். அந்த இடத்தில் ஒரு ஆளுயரத்திற்கு ஆழமாயிருந்தது. நடுக்கொள்ள நீர் கொஞ்சம் நிற்கிற இடத்தில் யாரோ முட்களை வெட்டிக் குவித்திருந்தார்கள். பழந்தகரம், பிசுங்கான். தண்ணீர் கறுப்பாய்க் கிடந்தது.

தயா எங்கே? தலையைத்தூக்கி நிமிர்ந்தான். ஆட்டிறைச்சிக் கொட்டில் வரை ஆளரவமேயில்லை. அங்கேயே நின்றுவிட்டானா?... விமானம் மீண்டும் இருந்தாற்போல எதிர்ப்புறத்தில் இருந்து நெருங்கியது. ஐந்தோ, ஆறோ... எது, எந்தப்பக்கமிருந்து வருமென்றுந் தெரியாது. அது உறுமிக் கொண்டு நேரே இங்கே வருகிறது. இயந்திர இரைச்சலும், அதனோடு சேர்ந்தொலிக்கிற 'கீய்...' சத்தமும் விழுங்குவதேபோல் நெருங்கி வந்தன.

குப்புறப்படுத்து, நெஞ்சைமெல்ல உயர்த்தி, கைகளை முட்டுக்கொடுத்துத் தலையைத் தாங்கி, விரல்களால் காதுகளைப் பொத்தி நிமிர்ந்தான். நுளம்புகள் மொய்த்து முகத்திலும் குத்தின. விமானம் விரைந்து சறுகிவருகிறது. அசையாது கிடந்தான். கண்களை உயர்த்தி மேலே பார்த்தான், வெயிலில் விமானம் பளிச்சிட்டது. எழுதியிருந்த எழுத்துக்கள் தெளிவாக. அதனூடே முகமொன்று கூடத் தெரிந்தது போலிருந்தது. இந்தநேரந்தான் அந்த ஆத்திரம் வந்தது இந்த அரசுப்பறவையை அடிக்கிற அம்பு மட்டும் இருந்தால். சத்தம் தலையைப்பிளந்தது. இன்னும் குனிந்து கண்களை இறுக்க மூடினான். ஏதோ ஒன்று காற்றைக் கிழித்துப் பாய்கிறது. இதோடு சரி. இடியாய் எழுந்த முழக்கம் கேட்டது.

விமானம் தாண்டிப் போகிற சத்தம் மங்கிக் கொண்டே போனது, நம்ப முடியவில்லை. தூரத்தூர மற்றவற்றின் உறுமல் மட்டும். திறந்த கண் எதிரே சற்றுத் தொலைவில் கல்லூரிக் கட்டிடம் பத்திரமாயிருந்தது, புகை, புழுதி. ஒன்றும் தெரிவதாயில்லை. வயல்வெளி கூட வித்தியாசமில்லாமல் விரிந்து கிடந்தது. பிறகு...?

வேறு எங்கே அடிக்கின்றார்கள்?

மரங்கள் வளர்ந்து அடர்ந்து கிடந்த வடக்குப் புறம், ஊர் அங்கே தொடங்கிற்று. மரங்களுக்கு அந்தப்பக்கந்தான் அடிக்கிறான்களா? இல்லை தெற்கேதான். கல்லூரிக்கும் பின்னால் தான் –எங்கோ அந்தச்சத்தம் கேட்டமாதிரி இருந்தது...

அடுத்ததரம் வருவதற்குள் ஊருக்குள் ஓடிவிட வேண்டும். எழுந்தான். சட்டையைக் கூடத்தட்டாமல் சைக்கிளைத் தூக்கினான். அது சரியாகவே இருந்தது. தள்ளிக்கொண்டே தெருவிற்கு ஓடி ஏறி......

மூசி மூசி... இரைச்சல்கள் மீண்டும் நெருங்கின. இந்தமாதிரி சீவியத்தில் ஒரு போதும் ஓடியதில்லை......

இரைச்சல்கள், உறுமல்கள்...... அந்தா சந்தி!

மரங்களும், ஊரும் அதிலிருந்து தொடங்கின. இனி மறைந்துகொள்ளலாம்......

வந்த வேகத்தில் வடக்கே வெட்டினான். எதிரே ஒரு சைக்கிள். நெற்றி முட்டாக வந்தது. ஒரு கிழவர். இந்த வயதிற்கு இவ்வளவு வேகமா? மோதாமல் விலகினார். கிழவர் இவனைக் கோபமாய்ப் பார்த்தார். தான் வந்து திரும்பிய விதம் பிழைதான்; இந்த நேரத்தில் எவர் வரப்போகிறார்களென்று! என்றாலும் இப்படித் திரும்பியிருக்கக் கூடாது,

''மடையா! .....'' கிழவர் கத்தினார்.

''...அங்கை றொக்கற் அடிக்கிறாங்கள்! அதுக்குள்ளை ஓடுறியா! ..''

அவர் சொன்னது மண்டையில் உறைக்க இரண்டு கணங்கள் பிடித்தன. கையாலும், காலாலும் பிரேக் பிடித்து, சட்டென்று அரைவட்டமாய்ச் சைக்கிளைத் திருப்பித் தெற்கே போகிற தெருவில் விட்டான். ''மெத்தப் பெரிய உபகாரம், பெரியவர்! '' குரல் வெளியே வந்தபோது, அவர் நியாயமான தூரம் போய் விட்டிருந்தார்.

விட்டுக் கலைத்தான்.

● ●

வெள்ளிக்கிழமை பின்னேரம், கோயிலுக்குப் போய் விட்டு வந்த தம்பி சொன்னான்.

''மாமா, இப்ப கொஞ்சம் முந்தி பிளேன் ஒண்டு புகைகக்கிக்கொண்டு பலாலிப் பக்கம் போனதாம் சனமெல்லாம் கண்டதாம் .''

''உனக்கு ஆர் சொன்னது?''

''சங்கர். தானும் வடிவாப் பார்த்தவனாம்''

இரவு ரேடியோக்களிலெல்லாம் இதே செய்தி சொன்னார்கள்.

''இலங்கை விமானப் படையின் விமானமொன்று இயந்திரக் கோளாறு காரணமாக வெடித்துச் சிதறி'' ஏதோ நெருடியது. என்ன இயந்திரக்கோளாறு? எப்படி வரும் அது? ஆறுதலாக நின்று எல்லாம் சரி பார்த்து மேலெழுகிற போது?...

இரவெல்லாம் இந்த விமான நினைவுகள்... கனவுகள் வரலாமென்றும் நினைவு. ஆனால் வரவில்லை.

காலையில் எழுந்ததுமே அன்றைய வேலைகள் ஞாபகம் வந்தன. அரை நாள். அதற்குள் எல்லாம் முடிக்க வேண்டும், மோட்டார் சைக்கிள்தான் சரி,

மெனிஃ போல்ட்டுக்குள் நுழைந்திருக்கிற ஸேலைன் குழாயில் தின்னரைச் சொட்டுச் சொட்டாக விட்டு, ஸ்விச்சைப்போட்டு சோக்கை முழுதாக இழுத்து த்றொற்றிலைத் திருகி... .. இரண்டு உதையில் ஸ்ராட் ஆகிவிட்டது. மெல்ல றெயிஸ் பண்ணி அரைச் சோக்கைத்தள்ளி என்ஜினை ஐடில் ஸ்பீடில் விட்டு .. சூடாகட்டும்.

வெளிக்கிடப்போனான்

வெளிக்கிட்டு வந்து என்ஜினை நிறுத்தி பைக்கை ஸ்ராண்டிலிருந்து இறக்கிய போதே வித்தியாசம் தெரிந்தது, தட்டென்றது. தட்டையாக இருந்தது. பார்க்காமலே பின் சில்லு காற்றுப்போய் விட்டதென்று புரிந்தது. அரியண்டந் தான்........ எப்படி? எங்கு? நேற்றுப் பின்னேரம் சரியாக இருந்ததே? திரும்பவும் ஸ்ராண்டில் விட்டுவிட்டு, பம்ப்பை எடுத்தான். எப்படியோ ரியூப்ஒட்டுகிற இடத்திற்குப் போய் விட்டால் சரி. காற்றடிப்பதற்குள் என்ஜின் சூடு ஆறிவிடாமலிருக்க வேணும்...மண்ணெண்ணெயில் ஓடுவதில் இதுதான்

சிக்கல். புத்துணர்வு கெடாமல் போட்டிருந்த சட்டையில் வியர்வை மெல்ல ஊறியது.

சைக்கிள் கடை கண்ணில் படுகிறபோதே பின் சில்லு மீண்டும் மெல்ல இடிப்பது போலிருந்தது. நிறுத்தி இறங்கி உருட்டலானான். கடையை அப்போதுதான் திறந்து கொண்டிருந்தார்கள். கடைக்காரர் இன்னும் வரவில்லை. மகன்தான் நின்றான். தானே வல்கனைஸ் செய்துவிடுவேன் என்று சொன்னான்.

''செய்தம்பி. அவசரம் ஆனால் கவனம்...'' என்றபடி மணிக் கூட்டைப் பார்த்தபோது, சரியாக எட்டு இருபத்தைந்து. பெடியன், சாவிப் பெட்டியுடன் வந்து குந்தினான்.

வானம் மந்தாரம் போட்டுக்கிடந்தது. மழை மெல்லிய துமியாய் விழுந்தது. நேற்றிரவு மழையின் ஈரமே இன்னுங் காயவில்லை.

''ஏப்ரல் இருபத்தைந்தாம் திகதியும் ஆச்சு—... இந்த மழை இப்படிப்பெய்யுது!''

பெடியன் சில்லைக் கழற்றி உருட்டிக்கொண்டு போனபோது அந்தச் சத்தங் கேட்டது கிழக்கே. ''கோடை இடி எண்டு சும்மாவா சொன்னது!..'' தொடர்ந்து ஓடிஓடி இடித்தது.

''இல்லை, சுடுறமாதிரியும் இருக்கு – வெடிச் சத்தமும் போலை...''

''இடி, வெடி, ஷெல், சூடு, எல்லாம் ஒண்டு மண்டடியாய்ப் போச்சு—''

நன்றாகக் கதைக்கக் கூடிய பெடியன்தான் என்றாலும் கைகள் வேலையைக் கவனித்தன.

வல்கனைஸ் செய்து முடித்து திரும்பவுங் காற்றடித்து, சரிபார்ப்பதற்காக மீண்டும் தண்ணீரில் அமிழ்த்திய போது நவரத்தினம் வந்து காலூன்றி நின்றார். சந்தையால் வருகிறகோலம். கடைக்கு வாங்கிய சாமான்கள் கரியலில் கட்டியிருந்தன.

''தெரியுமோ? .. அடுத்ததும் விழுந்துபோச்சு!...'' பரபரப்பும் சந்தோஷமும் முகத்தில் தெரிந்தன.

''பகிடி விடாதையுங்கோ......!'' என்றான் பெடியன்.

''சத்தியமா! .. உப்பதான், உதிலை நிலாவரையிலை...''

''அந்தச் சத்தம் அதுதானோ?''

''உதுகும் இயந்திரக் கோளாறாமோ?...'' பெடியன் ஈரக்கையை உதறியபடி சிரித்தான்.

சில்லைப் பூட்டி, பைக்கை மீண்டும் ஸ்ராட் செய்த போது, பெருந்துமியாய் விழுகிற மழையையும் பொருட்படுத்தாமல், சைக்கிள்கள் நிரை நிரையாய்க் கிழக்குப் பார்த்துப் பறந்து கொண்டிருந்தன. □□

---

*வெளிச்சம் சஞ்சிகையின் அடுத்த இதழ் நான்காமாண்டு நிறைவுச் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. இதற்கான படைப்புக்களைக் காலந் தாழ்த்தாது அனுப்பி வைக்குமாறு படைப்பாளிகளை வேண்டிக் கொள்கிறோம்.*

— ஆசிரியர் குழு

## 5

சு. சங்கிலிகுமாரன்




பங்குனியில் வெயில் கொளுத்தும். வயல்களில் அறுவடை முடிந்து நிலம் தரிசு பற்றி இருக்கும். ஐயனார் கோயில் வயலுக்கு நடுவிற்தான் உள்ளது. ஐயனார் கோவில் கொடியேறுகிறபோது, அறுவடை முடிந்திருக்கும். திருவிழா போட்டி போட்டுக் கொண்டு நடைபெறும். கந்தையா அம்மானின் திருவிழாவில் எட்டுக் கூட்டம் மேளமென்றால், அவரது மைத்துனன் சின்னத்துரையர் சின்னமேளமும் சேர்த்துப் பிடிப்பார். திருவிழா முழுக்க கலகலப்புத் தான்.

திருவிழாவிலே வாணவேடிக்கைதான் பிரதானமானது. வாண விளையாட்டு இல்லாமல் சின்னக் கோவிலில் கூடத் திருவிழா இருக்காது. வாணத்தை 'ஆகாசம்' என்றும் சொல்வார்கள். ஆகாசம்செய்வதில் ஒவ்வொரு தொழில் நுட்பம் உண்டு. பிரதானமாக கரி, உப்பு, கெந்தகம் மூன்றும் வாணத்தின் உள்ளீடுகள். இவற்றுக்கு ஒவ்வொரு அளவுப் பிரமாணம் இருக்கிறது. கெந்தகம் மஞ்சள் நிறமானது. சாம்பிராணிக் கட்டி போல இருக்கும்.

கெந்தகம், கறியுப்பு, கரி இவைகளை அரைப்பது சுலபமல்ல. பசை போல அரைக்க வேண்டும். பரியாரி இராசர் மருந்து அரைத்து அனுபவம் உள்ளவர். அவர்தான் வாணத்துக்கான மருந்தும் அரைப்பார். ஒரு வாணம் செய்ய நிறைய நேரமும் நிறையச் செலவும் பிடித்தது.

முதலில் தோன்றியது முரட்டு ஆகாசந்தான், இதை மூங்கில் ஆகாசம் என்றும் சொல்வார்கள். எங்களூரில் தாமோதரம் பிள்ளையும், முருகேசு சீனியரும், தெற்பையும் மூங்கில் வாணம் செய்வார்கள். முருகேசு சீனியரின் வீட்டு வளவு பெரியது. புளியும், தென்னையும், மாவும், பலாவும் நிறைந்த பெரிய வளவு. எந்த நேரமும் சில்லென்று குளிர் காற்று வீசிக் கொண்டிருக்கும்.

அவருக்கு ஒரு ஆசை. பெரியதொரு மூங்கில் ஆகாசம் செய்ய வேண்டும் என்பதே அந்த ஆசை. பெரிய ஆகாசம் என்றால் பெரிய கொட்டு வேண்டும். பலரிடமும் சொல்லி வைத்துவிட்டுக் காவலிருந்தார். அராலியில் இருந்து மயில்வாகனம் ஆசாரியார் மூலமாக ஒரு கொட்டுக் கிடைத்தது. அதிலிருந்து வேலைகள் ஆரம்பமாயின. ஏற்கனவே இரண்டு நாம்பன் கன்றுகளை விற்று, சேர்த்து வைத்திருந்த பணத்தில் 'மருந்து' வாங்கப்பட்டது. மருந்தரைக்கும் வேலை தொடங்கியது. பட்டை இறைப்பு முடிந்து பத்து மணிக்குக்

கூடினால் பின்னேரம் வரை ஒரே அரைப்புத்தான். இதற்கென நான்கு அம்மிகள் தயார் செய்யப்பட்டிருந்தன. ஒரு கிழமையும் சீனியர் வீட்டில்தான் மதியச் சாப்பாடு. நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கிழமையில் நான்கு சுடகம் மருந்து அரைத்து முடிந்தது.

மருந்து அளவு சரியா என்பதைப் பார்க்க, இடைக்கிடை சோதனைக் குழாய் விடப்பட்டது தென்னோலையில் சுருட்டி, சிறிய வாணம் போல ஆக்கி, அதற்குள் மருந்து அடைத்து, பரிசோதனை வாணம் விடுவதையே சோதனைக்குழாய் என்பர். வாணம் சரியாகச் சென்றால் மருந்து அரைப்பதும் சரிதான்.

மருந்து அரைத்து முடிய, கொட்டுக்குள் மண்கட்டை அடுக்கி, அதற்கு மேல் மருந்து நிரப்பப்பட்டது.

மருந்து நிரம்பிய பின் அதை இறுக்க வேண்டும். இறுக்குவது சுலபமல்ல. நான்கு பேர் தேவை. சுற்றிவர நான்கு பக்கமும் நின்று, பெரிய ஆமாரால் ஒருவர் மாறி ஒருவர் அடிப்பார்கள். இப்படி நீண்ட நேரமாக அடித்ததன் பின்னரே இறுகும். கிட்டத்தட்ட அரைநாள் பொழுது தேவை. முருகேசு சீனியரின் முரட்டு ஆகாசம் சரி செய்தாயிற்று. சந்தனை வெளியில் ஏற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. பன்னிரண்டு அடி நீளமான வால் பூவரசம் தடியால் செய்யப்பட்டது.

ஆகாசம் ஏற்றத் தயாராகி விட்டது. சந்தனை வைரவர் கோவிலுக்கு முன்பாக எல்லோரும் கூடி விட்டனர்.

வாணத்தைக் கொளுத்தினார் சீனியர். கந்தையரும், நடேசரும் ஈரச்சாக்கைப் போர்த்தியபடி வாலைப் பிடித்தனர். வாணம் மெல்ல மெல்லச் சீறிக் கொண்டு மேலெழும்ப இழுத்தது. இழுவை கூடியதும் இருவரும் கையை விட்டனர். ஸ்... ஸ்... என இரைச்சலிட்டு எழுந்தது வாணம். எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று மண்கட்டை தள்ளியது. வாணம் நிலைதளம்பி வந்து வீழ்ந்தது. ஏதோ பிழை நடந்து விட்டது. எல்லாம் போச்சுது.

சீனியர் 'அழுவாரொண்டாய்' நின்றார்.

''நீ வைரவரைக் கும்பிடேல்லை. அதுதான் காரணம்'' என்று யாரோ சொன்னார்.

எல்லாம் முடிந்தது. சீனியர் மனந்தளரவில்லை. அடுத்த மானம்பூவுக்கு பூதராயர் கோவிலின் முன்னால் முரட்டு ஆகாசம் விட்டு, வெற்றியடைந்தார்.

முரட்டு ஆகாசத்துக்கு பிராயம் பற்றையில் ஒரு கிழவியும் பிரபலம்.

பிராயம் பற்றைக் கிழவியின் வாணம் பல போட்டிகளில் முன்னணியில் நின்றது. ஐயனார் கோவிலில் பிராயம் பற்றைக் கிழவி வாணம் விடுவதை அறிந்து, வடமராட்சிப் பக்கமிருந்து கூடப் பார்வையாளர்கள் வருவர். பெரிய பெரிய முரட்டு ஆகாசங்கள் எல்லாம் அவரால் விடப்பட்டன. ''பிராம் பற்றைக் கிழவி'' ஒரு முறை ஏற்றிய வாணம் நிலைதளம்பி, சரிந்து போய் செக்கில் எண்ணெய் ஆட்டிக் கொண்டிருந்த ஒருவரது உயிரைப் பறித்தது. அதனால் பகிடியாய் 'பிராம்பத்தைக் கிழவியின்ர வாணமே விடப்போறாய்?' என்று கேட்பார்கள்.

இப்படித்தான் நல்லூரில் நடந்தது.

(வரும்) □□

சுவை மணம் தரம்

இவை மூன்றும் இணைந்த அரிசியைத் தருகிறது

## விஜிதா அரிசி ஆலை

உங்களுக்குத் தேவையான

முதல் தரமான நாட்டரிசி

உடையல் பச்சை

தீட்டல் பச்சை

இவைகளைப் பெற்றுக்கொள்ள ஒரு முறை வாருங்கள்

## விஜிதா அரிசி ஆலை

தாவடி தெற்கு,
கொக்குவில்.

# வெளிச்சம்

## நேர்காணல்

### பேராசிரியர் கா. சிவத்தம்பி

□□

நேர்முகம்
கருணாகரன்

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறைத் தலைவராக இருக்கும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களை தமிழுலகம் நன்கு அறியும். குறிப்பெழுதி இவரை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தமிழீழம் இவரால் பெருமைப்படுகிறது. இலக்கியத்தில் இவரது பார்வை, பயணம், இன்றைய நிலைப்பாடு என்பன யாவற்றையும் வாசகருக்கு நேர் காணல் கூறும்

---

□□ இன்றைய கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்காகவும், நாளைய ஆய்வாளனுக்காகவும். தங்கள் தோற்றுவாய். இளமைக்காலம், குடும்பச் சூழல், இலக்கியத்தில் தங்களின் முகிழ்ப்பு என்பனவற்றை முதலில் அறியத் தாருங்கள்?

●● நான் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த
காலஞ்சென்ற பண்டிதர், சைவப்புலவர்
தம்பர், பொன்னுச்சாமி
கார்த்திகேசுவினதும் அவர் மனைவி
வள்ளியம்மையினதும் மகன்
1932 இல் பிறந்தேன்.
நாங்கள் எழுவர் உடன் பிறப்புக்கள்.
ஐந்து சகோதரிகள். ஒரு தம்பி.
இப்பொழுது மூன்று சகோதரிகளும் ஒரு தம்பியும் உள்ளோம்.
வல்வெட்டித்துறை காலஞ்சென்ற
எஸ். வி. நடராசாவினதும், அவர் தம்
மனைவி மகாலட்சுமியினதும்
மூத்த மகளான ரூபவதியை (விமலா)
1963இல் திருமணம் செய்தேன்.
எமக்கு மூன்று பெண்கள்.
கிருத்திகா, தாரிணி, வர்த்தனி.
முதலிருவரும் திருமணஞ்செய்து விட்டார்கள்.
மூன்றாவது பெண் படிக்கிறாள்.
எனது ஆரம்பக்கல்வி பாணந்துறையில்
தொடங்கி, கரவெட்டி மாணிக்க
வித்தியாலயத்தில் நடந்தது.
கரவெட்டி விக்னேஸ்வராக்
கல்லூரியில்தான் ஆங்கிலவழிக்கல்வி
தொடங்கிற்று.
ஆளுமை உருவாக்கம் நடந்த காலத்திலே
கரவெட்டியின் பண்பாட்டுச் சூழல்
முக்கிய காரணியாக
இருந்துள்ளது என்பதனைப் பின்னோக்கி
உணர்கிறேன்.
வறுமையிற் செம்மை, தனித்துவங்களை
மறவாத இயைபு, ஆர்வ
விடயங்களை வளர்த்துக்கொள்ளும்
முயற்சி என்பன அந்தப் பின்
புலத்தில் நாங்கள் பெற்ற விழுமியங்கள்
எனலாம்.
விக்னேஸ்வராவில் படிப்பித்த
ஆசிரியர்கள் எல்லோரினது ஆளுமை
செல்வாக்கு மிகுந்தது.



''இன்றைய தமிழ்த் தேசியத்தினுள் ஒரு சர்வதேசியப் பொதுமை உள் ளது. அதுதான் மனித விடுதலை அந்தப் பொதுமையின் நமது நிலைப் பட்ட வெளிப்பாடுதான் எமது விடுத லைப் போராட்டம்''

ஆனால் குறிப்பாக கே. சிவப்பிரகாசம்
முக்கியமானவர்.
அவர் எம்மை நாம்
கண்டுபிடித்துக்கொள்ள உதவினார்.
பின்னர் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு
கொழும்பு சாஹிறாக் கல்லூரியில்.
கரவெட்டியிற் பெற்ற பண்பாட்டுத்
தோய்ச்சல் கொழும்பில்
முகிழ்க்கத் தொடங்கிற்று.
ஸாஹிறா மாணவனாக இருக்கும் பொழுதே
கலை, இலக்கிய ஈடுபாடு தொடங்கிற்று.
வானொலி ஒரு முக்கிய
சாதனமாகிற்று.
திருவாளர்கள் கமால்தீன், சண்முகரத்தினம்,
அஸீஸ் என்ற ஆசிரியர்களின் பங்கு
மிக முக்கியம்.
சீவிய கால நண்பர்களான
சிவகுருநாதன், சமீம் ஒருகால மாணவர்கள்.
1952இலேயே கைலாசபதியுடன்
தொடர்பு ஆரம்பித்தது.
1951இல் சிவகுருநாதனும் நானும்
''தமிழ் ஒளி'' என்ற சஞ்சிகையை
நடத்தினோம்.
(ஒரு இதழ்தான்) கொழும்புச் சூழலில்
நாடகக்கல்வி வளர்ந்தது.
பல்கலைக்கழகத்தில் (1952 / 53 – 56)
பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை,
வித்தியானந்தன் தொடர்பால்
நாடகப்பயிற்சி வலுப்பெற்றது.
பல்கலைக்கழக மட்டத்தில் மார்க்ஸீயப்
பரிச்சயம் கட்டமைப்பான ஒரு தரிசனமாக
முகிழ்த்து திட்டவட்டமான வாழ்க்கை
நோக்கு ஆகிற்று.
பொ. கந்தையாவின் தொடர்பு, மார்க்ஸீய
நண்பர்களின் சூழல், மார்க்ஸீய
எழுத்தாளர்களின் தொடர்பு ஆகியன
(ரகுநாதன்), முக்கிய
உருவாக்கச் சக்திகளாக அமைந்தன.
இந்தக் கண்ணோட்டத்தில், தமிழ்
இலக்கியத்தைப் பார்ப்பதென்பது புதிய
விடயங்களைக் கண்டுபிடிப்பது போன்ற
ஒரு உணர்வை ஏற்படுத்திற்று.
பல்கலைக்கழகத்தில் முதற் பட்டத்துக்குத்
தமிழ், வரலாறு, பொருளியல் செய்தமை,

# வளர்ச்சம்

ஒன்றுடன் ஒன்றை இணைத்துப்
பார்ப்பதற்கு உதவிற்று.
ஆனால் தொடக்ககால கலைப்பயில்வு
நாடகத் துறையிலேயே இருந்தது.
வானொலி நடிகனாகப் பின்னர்
சானாவுடன் தொடர்ந்து
சுந்தரலிங்கம், செந்திமணி மயில்வாகனம்
ஆகியோருடன் மேடையேறினோம்.
பல்கலைக்கழகத்தில் முதலில் நடித்தேன்.
அந்தத் தொடர்பு என்னைப்
பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை,
வித்தியானந்தனுடன் நன்கு
இணைய வைத்தது.
கைலாசபதியும் நானும் ஒருகால
மாணவர்கள்.
நாடகச் செயற்பாடு பின்னர் நாடக
வளர்ச்சியாகவும், நாடக வரலாறு பற்றிய
ஆய்வாகவும் வளர்ந்தது.
1956இல் பேராசிரியர் வித்தியானந்தன்
கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவைப்
பொறுப்பேற்ற காலம் முதல்
1966 வரை நான் செயலாளனாக
இருந்தேன்.
கொழும்பு நிலைப்பட்ட நடவடிக்கைகளுக்கு
நான் பொறுப்பாக இருக்கவேண்டிய
நிலைமையிருந்தது.
1956 இல் கலைமாணிப் படிப்பு முடித்துச்
சாஹிறாவில் ஆசிரியராகவும்,
பின்னர் பாராளுமன்றச் சமநேரமொழி
பெயர்ப்பாளராகவும் இருந்த காலத்தில்
(1956-61; 1961-65) வித்தியானந்தனுடைய
நாட்டுக் கூத்து மீள் கண்டுபிடிப்பு
முயற்சியில் அவருக்குத் துணையாக
நின்றோம் (கைலாசபதி, சுந்தரலிங்கம்)
இலக்கிய ஈடுபாடு 1950 களிலிருந்து
தொடங்குகிறது எனலாம்.
1954 முதல் முற்போக்கு இலக்கிய
இயக்கத்துடன் இணைந்து தொழிற்படும்
வாய்ப்புக்கிட்டிற்று.
எனது ஆக்கத்துறை முக்கியமாக நாடகமாக
(நடிப்பு, வானொலி நாடகம் எழுதுதல்)
அமைய, இலக்கியம் பற்றிய எனது
ஈடுபாடு பிரதானமாக விமர்சன
நிலைப்பட்டதாகவே இருந்தது.
1967-70 இல் இங்கிலாந்தில் பேராசிரியர்
ஜோர்ஜ் தொம்சனின் ஆய்வு வழிகாட்டல்
கிடைத்தது. அது புதிய தரிசனங்களைத்
தந்தது. அந்தப் பயிற்சி தளநிலைக்கும்
பார்வை முயற்சிகளுக்கும் ஒரு கருத்துநிலை
ஸ்திரத்தையும், அதேவேளையில்
புதியனவற்றை விளங்கி, உள்வாங்கிக்
கொள்ளும் தன்மையையும் தந்தது.
1960களில் தினகரனிலும், மரகதம்,
சரஸ்வதியிலும் பின்னர் 1970களில்
மல்லிகையிலும் எழுதும் வாய்ப்புக்கிட்டிற்று.
1965 முதல் வித்தியோதயப்
பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரானேன்.
1978இல் யாழ். பல்கலைக்கழகம்
வந்து சேர்ந்தேன்.
1956 முதல் இலக்கிய விமரிசனத்துறையில்
எழுதிவந்துள்ளேன்.
1966முதலே எனது விமர்சன எழுத்துக்கள்
நூலுருவில் வரத்தொடங்குகின்றன.
எனது தாயார் வழிவந்த நாட்டுப்
பண்பாட்டுப் பரிச்சயமும், தந்தையார்
வழிவந்த தமிழ் ஈடுபாடும், கணபதிப்பிள்ளை,
வித்தியானந்தன் வழிவந்த பார்வை,
செயலகற்சிகளும் கைலாசபதி முதல்
ரகுநாதன் வரை (முற்போக்கு
எழுத்தாள நண்பர்கள் பலர் உட்பட)
கிடைத்த இலக்கியத் தோழமையும்,
தொம்சன் வழிவந்த தரிசனவிருத்தியும்.,
தெணியான் போன்ற நண்பர்களின்
எழுத்து உந்துதல்களும், எனது மனைவியின்
ஒத்துழைப்பும், மகள்மாரின் ஊக்கமும்,
நல்ல ஆய்வாளர்கள்,
நல்ல மாணவர்கள் சிலரின் வினாக்களும்
என்னைத் தொழிற்பட வைத்துள்ளன.
பேராதனை வித்தியோதய (ஜயவர்த்தனபுர),
பர்மிங்காம், ஒக்ஸ்ஃபோட்,
களனி, கொழும்பு, தஞ்சாவூர் (JNU),
தில்லி, சென்னை, கேம்பிறிட்ஜ்,
அண்ணாமலை, உப்சலா, கலிபோர்னியா
போன்ற பல்கலைக்கழகங்களிலும்,
ஒரே கருத்துநிலையுடைய புலமையாளர்
குழுக்களிலும் பெற்ற புலமைத்துவ

# வளர்ச்சம்

ஊடாட்டங்கள் மனிதனையும் மனித படைப்புக்களையும் விளங்கிக் கொள்வதற்கான அறிவுப்பணியையும் ஆய்வு உந்துதலையும் தந்துள்ளன.

□□ இன்று, மார்க்சிய விமர்சகராக எங்கும் அறியப்பட்ட தாங்கள் ஈழத்து இலக்கியப் போக்கில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், வளர்ச்சி, குறிப்பிடக்கூடிய முக்கிய அமிசங்கள் பற்றிக் கூறுங்கள்......

●● ஈழத்து இலக்கியத்தில் ''அண்மைக்காலம்'' என்பதை இலக்கிய வரலாற்று நிலைப்படுத்திப் பார்ப்பதானால், உண்மையில் (எழுபதுகளில் தொடங்கி) எண்பதுகளில் ''வெடித்த'' இன விடுதலைப் போரும், அது காரணமாக ஏற்பட்ட மனிதநிலை இன்னல்களுமே திருப்பு முனையாக அமைவதைக் காணலாம்.
இந்த இலக்கியம் அடிப்படையில் அடக்குமுறைக்கெதிரான ஓர் இலக்கியமாகவே முகிழ்த்துள்ளது.
அதற்கு முன்னர் ஏற்படாத வாழ்க்கைப் பெயர்வுகள், அருந்தல்கள் ஏற்படுத்திய அநுபவத்தாக்கங்கள் இந்த இலக்கியத்தின் தன்மையை அதன் ஆழ, அகலங்களைத் தீர்மானித்துள்ளன.
இதனை இருநிலைப்பட்ட எழுத்தாளர்கள் ''பதிகை'' செய்துள்ளனர்.
(அ) அறுபது எழுபதுகளிலேயே இருந்து எழுதிக் கொண்டுவரும் ஓர் எழுத்தாளர் பரம்பரை. இவர்கள் வந்த கருத்து நிலைத்தளங்கள், உணர்திறன் முறைமைகள், பிந்திய தலைமுறையினரிலிருந்து வேறுபட்டவை.
இவர்கள் புதியதாக்கங்களை கண்ணோட்ட வேறுபாட்டுடன் பதிவு செய்யத்தொடங்கினர். முந்திய அநுபவங்களின் தொடர்ச்சி இவர்களில் முக்கியமான சிலருக்கு ஓர் முதிர்ச்சியை வழங்கியுள்ளது. முருகையன், சாந்தன், தெணியான் போன்றோரை உதாரணமாகக் கொள்ளலாம்.
ஜெயபாலன், புதுவை இரத்தினதுரை போன்றவர்களின் கவிதைகளில் இந்த ''வளர்ச்சி'' யைக் காணலாம்.
(ஆ) அடுத்த பிரிவினர் எழுபதுகளின் கடைக் கூற்றிலும் எண்பதுகளிலும் ஏற்பட்ட அநுபவத் ''தீக்குளிப்பி''னூடாக வந்தவர்கள். இவர்களுடைய அநுபவங்களும், புலப்பதிவுகளும், பார்வை நோக்கும் முற்றிலும் வித்தியாசமானவை.
இவர்களுடைய எழுத்துக்களிலே ஒரு புதிய 'சொற்கூட்டு' சொல் மரபு, படிமநோக்குத் தென்பட்டது. சேரனின் ஆரம்பகாலக் கவிதைகள் இதற்கு நல்ல உதாரணங்கள்.
இந்தப்புதிய அநுபவத்தைப் புதுக்கவிதை பதிவுசெய்த அளவுக்கு மரபுக்கவிதை பதிவுசெய்யவில்லை. அரவிந்தன் முதல் கருணாகரன்வரை, நட்சத்திரன் செவ்விந்தியன் வரை இதனைக் காணலாம்.
புதுக்கவிதையின் 'வடிவம்' (சொல்லாழம், படிமப் பரிமாணம், உணர்வு முறிவுகள் ஆதியன) இதற்கு உதவிற்று.
இந்த இரண்டாவது 'இலக்கியப் பதிகை தமிழிலக்கியத்துக்குப் புதியது. தமிழிலக்கியம் சுட்டும் காலப்பகுதிகளில் முன்னர் எப்பொழுதும் இப்பொழுது நடைபெறுவது போன்ற கருப்பையைக் கிழிக்கும் போராட்டங்கள், சமூக முரண்பாடுகள், அவற்றுக்குரிய அநுபவ ஆழத்துடன் நேரடியாகத்தமிழ் இலக்கியத்திற் சித்திரிக்கப்படவில்லை.
இந்த இலக்கியப் பதிகை ஈழத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல், ஈழத்துமக்களின் உலகளாவிய புலப்பரம்பலுடன் பரவி, அவ்வாறு புலம்பெயர்ந்தவர்களின் இதயக் குமுறல்களாக வெளிவரத்தொடங்கின. தமிழ் காரணமாக

வெளியேறியவர்கள் சென்று
தங்குமிடங்களில் தமிழிலேயே தமது
உணர்வுகளை வெளிக்கொணர்ந்தனர்.
போராட்ட வரலாறு இந்தப்பரவுகையைத்
தீர்மானித்தது.
இதனால் இன்று நாம் புலம்பெயர் இலக்கியம்
என்ற ஒரு நிகழ்வைக் காணுகிறோம்.
அந்தப் பாய்ச்சலும் வடியத்
தொடங்கியுள்ளது.
ஆனால் இது ஈழத்தமிழிலக்கியத்தின்
ஒரு விஸ்தரிப்பே
பத்தாண்டு காலத்துக்குச் சற்று மேற்பட்ட
(1983–1995) இந்த இலக்கிய அநுபவம்
இப்பொழுது தன்னைத்தானே கருத்து
நிலைத்தளப்படுத்திக் கொள்ள
விரும்புகிறது. இந்தப்புதிய கருத்து
நிலைத்தளத்தை நாம்
''தமிழ்த்தேசியம்'' எனலாம்.
இந்தத் தமிழ்த் தேசியத்தை 1960கள் முதல்
சர்வதேசிய மட்டத்தில்
முக்கியத்துவம் பெறும்
இனத்துவத் தேசியத்தின் பின்னணியில்
வைத்துப் பார்க்க வேண்டும் இதனை
ஐரோப்பாவில் இந்நூற்றாண்டின்
முற்பகுதியில் நிலவிய தேசியநோக்குடன்
இணைத்துப்பார்க்கக்கூடாது.
இந்தத் தேசியம், சனநாயகம் கற்பித்த
பண்பாட்டுத்தனித்துவப்பேணுகையின்
உந்துதலின் அடியாகவருவது.
இந்த வளர்ச்சியில் இது வரையில்
கவிதை நன்கு வளர்ந்துள்ளது. புதிய
பரிமாணங்களுடன் வளர்ந்துள்ளது.
அநுபவ ஆழங்களைச் சுட்டும் ஆழமான
கவிதைகள் வந்துள்ளன.
ஆனால் புனைகதை என்பது அடிப்படையில்
பகுப்பாய்வு நோக்கு நிலைப்பட்ட ஓர்
இலக்கிய வடிவம். ''கதை'' என்பது
புனைகதையின் ஓர் அமிசமே
புனைகதைக்குள் (சிறுகதை, நாவலில்)
காரண காரியத் தொடர்புள்ள, ஒரு
நெறிப்பட்ட சிந்தனைப்போக்குள்ள
ஓர் ''அமைப்பு'' இருக்கும்.

இப்பொழுதுதான் நமது புனைகதை
எழுத்தாளரிடையே' காலமாறுதல்கள்,
உணர்வு மாறுதல்களால் ஏற்பட்ட
வாழ்க்கை மாறுதல்களைச்
சித்திரிப்பதற்கான ஒரு மீள் அமைப்பீடு
நடைபெறுகின்றது. இந்த
முயற்சிகளினூடேதான் ஒரு ''பாரிய''
நாவல் மேற்கிளம்பும்.
புனைகதைக்கு வேண்டிய நோக்கினை
அமைத்துக் கொள்வதில், வெளியே
இருப்பவர்கள், இங்கு வாழும்
எழுத்தாளர்களை விட தனியே
வைத்து நோக்கப் படத்தக்கதான ஒரு
பருவரைவைப் பெறுவது சற்றுச்சுலபம்.
1990க்குப் பின் இங்கு ஏற்பட்டுள்ள
வாழ்க்கை நெருக்குவாரங்கள் இதில்
முக்கிய இடம்பெறுகின்றன.
எனினும் புனைகதைக்குள்ளும் சிறுகதை
சில முக்கிய படைப்புக்களை
வெளிக்கொணர்ந்துள்ளது எனலாம்.
ரஞ்சகுமாரின் கோசலை ஒரு
நல்ல உதாரணம்.
இலக்கியத்தின் அடிப்படைப்பண்பு அது
''மானுட அம்சத்''தைக்
கொண்டிருப்பதுதான். அரசியற் சமூகப்
பிரச்சினைகளை மனித நிலைப்படுத்திச்
சித்திரிப்பதுதான் அதன் பலம்.
எமது பிரச்சினைகளை மனித மட்டத்து
உந்துதல்கள், செயற்பாடுகளாகப்
பார்க்கும் நிலைமை வரும்பொழுதுதான்
இலக்கியத்தன்மை பளிச்சிடும்.
உலகின் இன்றைய வளர்ச்சிக்கும்
இந்தப் போராட்டத்தின் இன்றைய
கருத்துநிலை வளர்ச்சிக்குமிடையே,
இதனை மனிதநிலைப்படுத்துதல் அவசியம்
என்று கருதுகின்றேன்.
இன்றைய தமிழ்த்தேசியத்தினுள் ஒரு
சர்வதேசியப் பொதுமை உள்ளது.
அதுதான் மனித விடுதலை. அந்தப்
பொதுமையின் நமது நிலைப்பட்ட
வெளிப்பாடுதான் எமது
விடுதலைப் போராட்டம்.

# வெளிச்சம்

இன்று நம்மிடையே நடக்கும் இலக்கிய முயற்சிகளுக்கு இத்தகைய ஒரு ''விடுதலை''த்தத்துவம் இருத்தல் வேண்டும். இந்தக் கட்டத்தில் யதார்த்தச் சித்திரிப்புப் பற்றிய ஒரு உண்மையை வற்புறுத்த விரும்புகிறேன்.
எழுத்தாளன் / கலைஞன் வெளியே காணப்படும் யதார்த்தத்தை ஆதாரசுருதியாகக் கொண்டு ஒரு புதிய யதார்த்தத்தை தன் படைப்பில் / படைப்பாகத் தோற்றுவிக்கின்றான்.
புதிதாகத் தான் தோற்றுவிக்கும் ஆக்கத்தைக்கொண்டு மனிதன் பின்னர் தன்னை மாற்றிக் கொள்கிறான்.
இலக்கியம் சமூக மாற்றத்தைச் செய்ய முற்படும்பொழுது, படைப்பு (ஆக்கம்) பற்றிய இத்தெளிவு இருத்தல் வேண்டும். சூழவுள்ள யதார்த்தத்தை வெறுமனே விவரணம் செய்வது கலைப்படைப்பாகி விடாது. புதிய படைப்பே இலட்சியத்தின் குறியீடாக அமைதல் வேண்டும்.
இவ்வேளை இலைமறை காயாக உள்ள ஒரு முக்கிய சமூக, இலக்கியப்பண்பு பற்றி எடுத்துக்கூற விரும்புகிறேன்.
யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாற்றில் இதுவரை காணப்படாத மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இம்மாற்றங்களினூடே சமூகப்பழைமையைப் போற்றுவதற்கான ஒரு நடைமுறையும் வன்மைப்பட்டுக்கொண்டு போகிறது.
பண்பாட்டுப் பேணுகை என்ற போர்வையில் அது பழைமையைப் பேணவும், புதிய மாற்றங்களைச் சூசகமாக எதிர்க்கவும் முனைகிறது.
இதுவும் வரலாற்றின் தர்க்கத்துக்குள் நிற்பதுதான்.

□□ இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் எந்தளவு உறவு? அந்த உறவு எமது இலக்கியங்களில் எவ்வாறு உணரப்பட்டுள்ளது?

●● இலக்கியமும் அரசியலும் மனிதப்பிரக்ஞையின் (மனிதனின் சமூகத் தொழிற்பாட்டில் தோன்றும் உணர்வுச் செயற்பாட்டின்) இருவேறு தளங்கள். இருவேறு மட்டங்கள்.
இலக்கியம் எனும் மட்டத்தில் மனித உணர்ச்சிகள், அவற்றின் பகைப்புலம், அவற்றின் சமூகத்தளம், அவை சொல்லுரு ஆக்கப்படல் என்பன முக்கியமாகும்.
அரசியல் எனும் மட்டத்தில் மனிதனின் சமூக ஒழுங்கமைப்பு, அதற்கு வேண்டிய அதிகாரம், அந்த அதிகாரத்தின் அடிப்படைகள் ஆகியன முக்கியமாகின்றன.
இலக்கியம் என்பது எம்மைப் பார்க்கவைப்பது, உணரவைப்பது. அரசியல் நமது ஆட்சியின் அமிசங்களைப் பற்றியது. எந்த அமைப்பில், எப்படியிருந்தால் நமது முழுமை தெரிய வரும் என்பது பற்றியது.
ஆனால் இவற்றுக்கிடையே ஒரு அடிப்படையான உறவு உள்ளது. அது பொருளாதாரத்தளம், உற்பத்தி முறைமை முதலியவற்றினூடாக வருவது.
வெளிப்பார்வைக்குத் தனித்தனியே தெரிவனவான இலக்கியத்தையும், அரசியலையும் (அல்லது அரசியலையும் இலக்கியத்தையும்) இணைப்பது கருத்துநிலை (ஐடியோலொஜி) என்பது.
கருத்துநிலை என்பதை பின்வருமாறு விளக்கலாம.
'சமூக ஊடாட்டம் (அதாவது சமூகத்தினுள் ஏற்படும் உணர்வுப் பரிமாறல்கள்) வளரத்தொடங்க, அந்தச் சமூகத்தில் வாழும் மனிதர்கள், உலகம் பற்றியும், தங்களது சொந்தச்சமூக வாழ்க்கை பற்றியும், தெய்வம், சொத்து, அறம், நீதி ஆதியன பற்றியும் எண்ணக் கருத்துக்களையும் நோக்குகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர்.
இவற்றினடியாக சமூகம் பற்றியும் அரசியல், சட்ட, மத, கலை, தத்துவ நோக்குப் பற்றியும் கருத்துருவான ஒரு பொதுவான எண்ண அமைப்பு

வளரத்தொடங்குகின்றது.
அந்த எண்ண அமைப்புத்தான்
கருத்துநிலை எனக் குறிப்பிடப்படுவதாகும்''
இது ஒவ்வொருவரும் தனது தானத்திலிருந்து
மேற்கொள்ளும் உலகநோக்கு.
இத்தகைய உலக நோக்கு
இருக்கும்பொழுதுதான் இலக்கியத்தையும்
அரசியலையும் ஒன்றாக இணைத்து
நோக்கலாம்.
கருத்துநிலை என்பது அபிப்பிராயமல்ல.
அது எம்முள்ளே இருந்து வெளிப்படும்
எமது பார்வைத்தளம்.
உலகம்பற்றி, நம்மைச்சூழ நடப்பனபற்றி,
அவற்றின் முக்கியத்துவம் பற்றிய ஓர்
ஆழமான பார்வை இல்லாமல்
அது வராது.
அத்தகைய ஆழ நோக்குள்ளவர்கள்தான்
இலக்கியத்தையும் அரசியலையும்
வெற்றிகரமாக இணைக்க முடியும்.
நம்மைப் பொறுத்த வரையில் எல்லா
எழுத்தாளர்களும், தமது தளத்திலிருந்து
உலகைப்பார்க்கும், உலகத்திலிருந்து
தம்மைப் பார்க்கும் ஒரு நோக்கு
முறையை வளர்த்துக் கொள்வதில்லை.
சூழவுள்ளதைப் பதிகை செய்வதுதான்
தமது தொழிற்பாடு எனக் கருதுகின்றனர்.
ஆனால் நமது இலக்கிய வரலாற்றில்
அப்படித்தொழிற்பட்டவர்கள் இருக்கிறார்கள்.
சமுக சமத்துவம் என்னும் கருத்துநிலையில்
நின்று கொண்டு அரசியலையும்
இலக்கியத்தையும் இணைத்த வரலாறு
ஒன்று நம்மிடையே உண்டு.
அந்த சமுகசமத்துவத்தின் சனநாயக
அடிப்படைதான் இன்று எம்மை அதன்
அடுத்த கட்டத்துக்கு — இனத்தின்
சமத்துவத்துக்கு — இட்டுச் சென்றுள்ளது.
தமக்கென ஒரு கருத்துநிலை
இல்லாதவர்களால் அரசியலையும்
இலக்கியத்தையும் இணைத்துப்பார்க்கும்
திறன் இருக்காது.
படைப்பாளியிடம் அரசியலையும்
இலக்கியத்தையும் இணைத்துப்
பார்க்கின்ற பார்வை விசாலமும்
அதேவேளையில் அந்தப் படைப்பைக்
கலைத்துவமுடையதாக்கும்
திறனும் உண்டு.

□□ சமகாலத்தில் இலக்கிய விமர்சனத்தில் ஈடுபட்டிருந்த தாங்களும் கலாநிதி கைலாசபதியும் முகம் கொடுத்த பிரச்சினைகளில் முக்கியமானதாக எதைக் கருதுகிறீர்கள்?

●● அக்காலத்தில் முற்போக்கு
அணியினரின் ''இலக்கியப்பேச்சாளர்கள்''
என்றவகையில் எமது அன்றைய நிலைப்பாடு
பின்வருமாறு அமைந்திருந்தது.
''சமுகத்தின் முற்போக்கான வளர்ச்சியில்
இலக்கியத்துக்கு ஒரு முக்கிய பங்கு
உண்டு. இலக்கியம் தனது (அந்தப்)
பணியை செய்வதற்கான
தொழிற்பாடு அவசியம்''
அன்றைய நிலையில் இந்தச்
செயற்பாட்டில் நாம் இரண்டு
பிரச்சினைகளை எதிர்நோக்க
வேண்டியிருந்தது.
(1) இது மரபுவழி அறிஞர்களிடமிருந்து
வந்தது. அவர்கள் அன்றைய நிலையில்
அந்தப்பணியைச் செய்யும் இலக்கிய
வடிவங்கள் தமிழ்மரபில் வந்தனவல்ல
என்றும், அந்தமுறையில் அன்று
எழுதியவர்களில் கணிசமானோர்
இலக்கியம் எழுதுவதற்குத்
தகுதியற்றவர்கள் என்றும் வாதிட்டனர்.
(2) இன்னொருபுறத்தில், புதிய
இலக்கிய வகைகளை கற்றுக்
கொண்டவர்களை இலக்கியம் என்பது
இத்தகைய ''அரசியல்'' பேசக்கூடாது.
அது பிரதானமாக
சுவைக்கப்படுவதற்கானது என்று
வாதிட்டனர்.
(உண்மையில் அன்றைய எழுத்தாளர் பலர்
நல்ல விமர்சகர்களாகவும் இருந்தனர்.
உ-ம் முருகையன் காவலூர்இராசதுரை,
செல்வராசன், ஆனால் நாம் இருவருமே

தனியாகவே விமர்சகர்களாக
தொழிற்பட்டோம்)
இந்த நிலையில் நாங்கள் இரண்டு
காரியங்களைச் செய்ய வேண்டியிருந்தது
(1) தமிழின் வளர்ச்சிப்போக்கை
விளங்கிக் கொள்ளாத
மரபுநிலையாளருக் கெதிராகக்
கருத்துக்கள் வைத்தல்
(2) எமது அணியின் எழுத்தாளர்களின்



படைப்புக்களை, உலக, தமிழ் இலக்கிய
வரலாற்றில் நின்று நியாயப்படுத்துவது.

இந்த இருமுனைப் போராட்டத்தை
எங்களால் இயன்ற அளவுக்குச் செய்தோம்
என்றே கூறுதல் வேண்டும்.
இந்தப்போராட்டத்தின் முதற் கட்டத்தில்
கைலாசபதி தினகரன் ஆசிரியராக
இருந்தவர். அவர் தமது பிரசுரத்திறனால்
நல்ல படைப்பிலக்கியக்களை
வெளிக்கொணர்ந்தார்.
எமது இந்த நடவடிக்கைகளில்
''மரபுப்போராட்டம்'' என்பது ஒரு
முக்கியமான கட்டம் என்று கருதுகிறேன்.
அந்தப்போராடடத்தின் பொழுது
பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை,
செல்வநாயகம் முதலியோர்களும்
புதிய இலக்கியத் தாடனமுள்ள மரபுவழித்
தமிழ்ப்புலமையாளரும் (சொக்கன்)
எம்பக்கம் நின்றனர்.
எமது வாதத்தின் பொழுது
நாவலரைக்கூட நாம் காலத்தின் குரலாகவே
எடுத்துக்காட்டினோம்.
அதுமாத்திரமல்லாமல், நாமே
பழந்தமிழிலக்கியம் பற்றிய சமூக,
வரலாற்று நிலைப்பட்ட விமர்சனங்களை
(ஆய்வுகளை) முன்வைத்தோம்.
கைலாசபதியின் நாடும் நாயன்மாரும்,
திணைக்கோட்பாடு பற்றிய எனது
சமூகநிலை விளக்கம் ஆகியன
முக்கியம் பெற்றன.
இவற்றுக்கு முன்னர் நவீன
தமிழிலக்கிய வளர்ச்சிகளை
தமிழின்வளர்ச்சிப் பின்புலத்தில் வைத்து
விமர்சித்தோம். தமிழ்நாவல்
இலக்கியம் (1967) தமிழ்ச்சிறுகதையின்
வளர்ச்சி (1966) பற்றிய எமது ஆய்வுகள்
முக்கியமாகின.
இந்த முயற்சிகளில் ஏற்கனவே
ஈடுபட்டிருந்த ரகுநாதன், வானமாமலை
ஆகியோருடன் இணைந்தும், தனித்தும்
தொழிற்படும் வாய்ப்பிருந்தது.
அந்த அளவில் அந்தக் காலகட்டத்தின்
தேவைகளுக்கு எமது ஆளுமைகளின்
தனித்துவங்களுக்கு ஏற்ப முகங்
கொடுத்தோம் என்றேகருதுகிறேன்.
அந்த 'எதிர்ப்பு' க்குப்பின்னர் நாம்
புதிய இலக்கிய காரரிடமிருந்து
எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருந்தது.
அவை ''தேசிய இலக்கியம்'',
யதார்த்தப் பிரயோகம் என்பன
பற்றியனவாகும். இந்தக் கட்டத்திலும்
எம்முடன் சில முக்கிய எழுத்தாளர்கள்

இணைந்து நின்றனர். உதாரணமாக தேசிய இலக்கியம் பற்றிப்பேசிய பொழுது, ஏ. ஜே. கனகரத்தினா அது பற்றி எழுதியவை முக்கியமாகும்.
அந்தக் கட்டத்துக்கும்மேல், இன்னொரு ''எதிர்ப்பு'' வந்தது. அது இந்த எழுத்துகளின் அழகியல் பற்றியது. சிலர் மார்க்ஸியம் பழையது என்று கூறித் தம்மைப் புதிய மார்க்ஸிஸ்டுக்களாகக் காட்டிக் கொண்டனர். அந்தக் கருத்து வேறுபாடுகளுக்கு முகம் கொடுக்கும் காலத்திலேதான் கைலாஸ் காலமானான்.
பினனோக்காகப் பார்க்கும்பொழுது, கைலாசினதும் எனதும் முக்கியபணி என்று கூறத்தக்கது, நவீன தமிழிலக்கியத்தினை தமிழ் வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கியமையும் பழைய இலக்கியங்களையே சமூக விமர்சனம் செய்தமையும் தான்.
ஒரு விடயத்தை மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றேன். நாங்கள் விமர்சனத்துறையில் ''சமமானவர்களிடையே முன்னணியாளர்களாக'' இருந்தோமே தவிர விமர்சனத்துறை முழுவதையும் எமது கையில் வைத்திருக்கவில்லை. அப்படி வைத்திருக்கவும் முடியாது. அது வரலாற்று முரண்.

□□ தமிழ்த்தேசிய உணர்வின் கலை இலக்கியங்களை ஒதுக்கியவர் என்ற பெரும்பழி ஒன்று உங்கள் மீது முன்வைக்கப்படுகிறது. இது உண்மையானல் அதற்குரிய காரணங்கள் என்ன? அல்லது இன்று அந்த அணுகுமுறையிலிருந்து மாற்றம் கொண்டுள்ளீர்களா?

●● இந்த வினாவுக்குரிய விடை மிகத்தெளிவாக இருக்கவேண்டுவது அவசியமாகியுள்ளது. ஏனெனில் இது பற்றிய சர்ச்சைகள் அடிக்கடி கிளம்புவதுண்டு.
விமர்சகன், மாணவன், ஆசிரியன் என்றவகையில் ''தமிழ்த்தேசிய உணர்வின் கலை இலக்கியங்களை'' நான் ஒதுக்கினேன் என்று என்றுமே கூறமுடியாது.
முற்போக்கு இலக்கியகாரர் என்ற நாம் குறிப்பிட்ட காலத்தில் ''தேசிய இலக்கியம்'' (1960 களில்) என்ற ஒரு நிலைப்பாட்டை முன்வைத்தோம். அது தமிழ் விரோத இயக்கமேயல்ல. 1950- 60 களில் இயக்கவேகத்துடன் தொழிற்பட்ட இலக்கிய இயக்கம், இலங்கையில் தோன்றும் தமிழிலக்கியம் இலங்கையை, இங்கையின் பிரச்சினைகளை அவற்றுக்குரிய மண்வாசனையுடன் வெளிக்கொணருவனவாக இருத்தல் வேண்டுமென்பதையும், அதற்குக்குந்தகமாக அமையும் சென்னைச் செல்வாக்குகளை முறியடித்தல் வேண்டுமென்பதையும் வற்புறுத்திற்று.
இதனை இலங்கைத் தமிழர்களின் கட்சிகளாக விளங்கியவை எதிர்த்தன. இலங்கைக்கெனத்தனிச்சிறப்புடைய ஓர் இலக்கியப் பாரம்பரியம் உண்டு என்பதை வற்புறுத்தும் வகையில் ஈழத்து இலக்கியம் எனும் தொடர் ரஞ்சகப்படுத்தப்பட்டது......
இது ஈழத்தின் தமிழிலக்கியம் சென்னை எழுத்துக் கலாச்சாரத்தின் பிரதியாக இருக்கக்கூடாது என்று வாதிட்டது. இது அதன் ஒரு மிகமுக்கியமான அமிசம். அந்தத்தேசிய இலக்கியத்தில் சிங்கள தமிழ் உறவு பேணப்படவேண்டுமென்பதும் ஓரமிசமே. ஆனால் அக்காலத்தில் தேசிய இலக்கியத்தின் பிரச்சினை ஆக்கப்பட்டது அதுவல்ல. தமிழ்நாட்டு உறவே முக்கிய விமர்சனமாக வைக்கப்பட்டது.
அக்காலத்தில் (60களில்) இனப்பிரச்சினை

''தேசியப்பிரச்சனை'' என்றுகூட எடுத்து மொழியப்படவில்லை. முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்த பலஎழுத்தாளர்கள் தமது பிரக்ஞைவட்டத்துள் வந்த சமூக சமத்துவம் பற்றியே எழுதினர்.
அக்காலகட்டத்தில் தமிழராக வாழுவது என்பது ஒரு மனிதப்பிரச்சினையல்ல. (அந்தப்பிரச்சினை தோன்றுவது 70 களின் பிற்காலத்தில். அப்பொழுது தமிழ்காரணமாகவந்த ஒடுக்குமுறைகளை எதிர்க்க அந்த எழுத்தாளர்களும் பின் நிற்கவில்லை)
எனவே தமிழ்த்தேசிய உணர்வின் கலை இலக்கியங்களை ஒதுக்கியவர்'' என்பது பொருந்தாத ஒன்று.
அதற்கும் மேலாக ஈழத்தின் இலக்கியம் என்பது யாழ்ப்பாணத்து இலக்கியம் மாத்திரமல்ல. அது ஈழத்தமிழ் மக்கள் சகலரினதும் இலக்கியம் என்று எடுத்துக்கூறினோம்.
இவ்வேளையில் ''தமிழ்த்தேசியம்'' என்ற இத்தொடரின் பயன்பாடு பற்றிப் பேசுவதும் முக்கியமாகும். இது எண்பதுகளிலிருந்து வழக்கில் வந்துள்ள ஒன்றாகும். குறிப்பாக விடுதலை அமைப்புகளின் தோற்றத்தின் பின்னர் இது முனைப்புப்பெற்றது.
எனவே பின்வந்த ஒரு தொடரை வைத்துக்கொண்டு முன்நிலவிய ஒரு நிலமையை விவரிப்பது பொருந்தாது. மேலும் அந்தக்காலத்தில் தமிழினவாதம் பேசியவர்கள் சமூகசமத்துவ விடயங்களில் பிற்போக்காளர்களாக விளங்கினார்கள். தீண்டாமை ஒழிப்பிற்கூட இது தென்பட்டது.
முற்போககு இயக்கத்தின் இடதுசாரி நிலைப்பாடு காரணமாக அக்காலத்து இடதுசாரி நிலைப்பாட்டை எம்மிற்பலர் ஏற்றுக்கொண்டது உண்மை.
ஆனால் 1977க் கலவரத்தின் பின்னர் எம்மிற்சிலர் எமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத் தொடங்கினோம்.
1978 இல் கல்கத்தாவில் நடைபெற்ற ஐந்தாவது சமூக விஞ்ஞானிகள் மகாநாட்டில் நான் வாசித்த ''பண்பாட்டுப் பன்மையும் அரசியல் ஒருமையும்'' என்ற கட்டுரையில் சமஷ்டி நிலைப்பட்ட அதிகாரப்பகிர்வு வேண்டுமென்று வாதிட்டேன்.
பின்னர் 1983 டிசம்பரில் எழுதிய கட்டுரையில் தீவிரவாதத் தமிழ்இளைஞர் அமைப்புகளை வரவேற்று எழுதினேன். (லங்காகார்டியனில் பிரசுரமானது)
அரசியல்விடுதலை, சமூகவிடுதலை, பொருளாதாரவிடுதலை ஆகியமூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய ''லிபரேஷன்'' என்ற தொடரின் அரசியல் சமூக முக்கியத்துவத்தை உணர்ந்து எழுதினேன்.
இந்தஎழுத்துக்கள் பல ஆய்வாளர்களால் மேற்கோள்காட்டப்பட்டுள்ளன.
இலக்கியத்தைப் பொறுத்தவரையில் 1983க் கலவரத்தின் முன்னரே அவ்வருடம் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் வெளிவந்த ''புதிய சவால்கள், புதிய பிரக்ஞைகள், புதிய எழுத்துக்கள்'' என்ற கட்டுரையில் ''இலங்கையின் தமிழ்ப்பிரச்சினை இன்று நோக்கப்படும் முறையிலும், உணரப்படும் முறையிலும், உள்ளடங்கி நிற்கும் விஷயங்களிலும் 1950 – 60 களில் பிரச்சினை எடுத்துக் கூறப்பட்ட, உணரப்பட்ட முறையிலிருந்தும், விடய உள்ளடக்கத்திலிருந்தும் முற்றாக மாறுபட்டு நிற்கின்றது என்பதை விளங்கிக் கொள்வது மிகமிக முக்கியமான ஒன்றாகும். இந்த உள்ளடக்க மாற்றங்கள் பிரச்சனையின் 'தர'த்தையும் மாற்றியுள்ளன.''

(மல்லிகை மார்ச் 1983 பக்.11)

இந்த மாற்றத்தை வரலாற்றுப் போக்கில் நான் மேற்கொள்ளும் தவிர்க்க முடியாத மாற்றமாகவே கருதுகிறேன்.
ஈழத்தமிழராக வாழும் ஒவ்வொருவரிடத்தும்

இது ஒரு தர்க்கரீதியான வளர்ச்சியாகும்.
உண்மையில் 1995 இல் நான் நிகழ்த்திய ஹன்டி பேரின்பநாயகம் நினைவுச் சொற்பொழிவின் தலைப்பே ''தமிழ்த் தேசியமும் சமூக முரண்பாடுகளும்'' என்பதாகும். ஈரோஸ் இயக்கத்தினர் ஆங்கில உரையைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தனர்.
இன்றைய நிலை தமிழ்த்தேசியத்தின்



ஒடுக்குமுறை விரோத இலக்கியக்காலகட்டம். தமிழ்த்தேசியம் என்ற தொடரே இன்று விரிவான ஒரு கருத்தைப் பெற்றுள்ளது.

▢▢ ஒரு சமூகவியலாளனாகவும் மார்க்சீய விமர்சகராகவும் தமிழ் அறிஞராகவும் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் பல வளர்ச்சிப் படிகளில் ஏறியுள்ள தாங்கள் இன்றைய எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தையும் அதனுடன் இணைந்து பிறக்கும் கலை இலக்கியங்களையும் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

●● எமது போராட்டம் இன்று சர்வதேசிய கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக அமைந்துள்ளது.போராட்டத்தின் திண்மையும் முயற்சிப்பாடும் அதன் பால் பலரை ஈர்க்கின்றது. அதன் அரசியல் நிலைப்பாடு உலகறிந்த ஒன்றாகி விட்டது.
இந்த நிலையில், இது சமூக, பொருளாதார விடுதலைகளுக்குமான ஒரு போராட்டம் என்பதை நினைவுறுத்திக் கொண்டே இருப்போம்.
இச்சமூகத்திற் சில அடிப்படையான அணுகுமுறைகள் மாறத் தொடங்கி உள்ளன.
பெண்கள் பற்றிய கண்ணோட்டம் முக்கியமான பல மாற்றங்களைப் பெற்றுள்ளது.
யாழ்ப்பாணச் சமூகம் மாற்றத்தை வெகு இலகுவாக பின்போடும் ஆற்றல் வாய்ந்தது. இங்குள்ள சமூக ஆதிக்கம் வருகின்ற புதிய சக்திகளை ஏற்பது போலக் காட்டி தனது மேலாண்மையை தொடர்ந்து பேணிவந்துள்ளமை வரலாற்றிற் கண்டறியப்பட்ட ஒன்றாகும்.
எனவே சமூக மாற்றம் என்பது ஆணிவேர்களைப் பாதிப்பதாக இருக்க வேண்டும்.
இத்தகையன போராட்டத்தின் சவால்களை அதிகரிக்கின்றன.
மக்களின் ஒருமைப்பாடும், சர்வதேச நல்லெண்ணமுந் திண்ணியநோக்கும் போராட்டத்தின் இலக்குகளை அடைய நிச்சயம் வழிவகுக்கும்.
போராட்டமானது இன்று ஈழத்தமிழ் மக்களின் சமூகப்பிரச்னையைத் தீர்மானிப்பதாகவுள்ளது.
இதன் காரணமாக, இன்றியமையாத

வகையிலே போராட்டத்தின் சாயல்கள் கலை, இலக்கியத்திலே படிந்துள்ளன. நுண்கலைகளை எடுத்துக் கொண்டால் இன்று மக்களின் இருக்கைப் பிரச்சினைகளை சந்தேகமற எடுத்துக்காட்டும் ஊடகங்களாக ஓவியம், இசை, திரைப்படங்கள் ஆகியன மேற் கிளம்பி உள்ளன. இசைப்பாடல்களின் தரம் மிக உயர்ந்துள்ளது.
1983 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நாடகம் மிக முக்கியமான சமூக வன்மையுள்ள ஒரு கலைவடிவமாக மேற்கிளம்பியுள்ளது.
உண்மையில் கலைத்துறையில் ஏற்பட்டுள்ள அளவுக்கு, இலக்கியத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். இலக்கியம் பெரும்பான்மை பயிலப்படும் ஒரு கலை என்பதால் அதன் வளர்ச்சியில் சமவீனம் காணப்படுவது இயல்பு.
ஆழ்ந்த கருத்து நிலைத் துணிபும் நோக்கு நேர்மையும் இணைகின்ற போது இலக்கியம் சிறக்கும்.

□□ நமது இன்றைய ஈழத்து இலக்கியம் உலகத்தமிழ் இலக்கியத்துக்குப் புதிய அனுபவமாக இருக்குமென்று கூறியுள்ளீர்கள். இந்தப் போர்தரும் அனுபவங்கள் மற்றும் ஏனைய வாழ்க்கைப் போக்குக் குறித்தா அல்லது நமது இன்றைய போராட்ட இலக்கியச் செல்வழி குறித்தா இந்தப் புதிய இலக்கியம் இருக்கும்?

●● அனைத்துத்தமிழிலக்கியப் பரப்பிலும் ஈழத்துத் தமிழிலக்கியத்தை வைத்து நோக்கும் பொழுது தான், ஈழத்துத் தமிழிலக்கியம் எந்த அளவிற்கு தமிழிலக்கியத்தின் விடயவீச்சை, உணர்திறனை தெளிவாக்கி உள்ளது என்பது தெரியவரும்.
எந்த ஒரு இலக்கியத்தினதும் செழுமை, அந்த இலக்கியத்தின் பொருளாகிய மக்கள் அனுபவம் எத்துணை ஆழமானதாகவும் அகலமானதாகவும், நேர்மையானதாகவும் இருந்தது என்பதைப் பொறுத்தது, ஆகும்.
இன்று நாம் அனுபவித்துள்ள நிலைகுலைவு, மனித அருந்தல்கள், அவலங்கள் மிக ஆளமானவை; பாந்துபட்டவை.
இவை யாவும் ஏதோ ஒரு இலட்சியத்துக்காகச் செய்யப்பட்ட விட்டுக்கொடுப்புக்கள் ஏற்புக்களே. (ஏற்றுக்கொள்கைகளே)
முழுத்தமிழிலக்கிய வரலாற்றையும் மீள் நோக்கிப் பார்க்கும் போது இத்தகைய ஒரு பரந்துபட்ட பாதிப்பு நிகழவில்லை. நிகழ்ந்ததான இலக்கியப் பதிவும் இல்லை.
இந்தப்பின்புலத்திலே பார்க்கும் பொழுது தான் நமது இலக்கியம் தமிழ் இலக்கியம் இது வரை பேசாத பல அனுபவங்களைப் பற்றி பேசப் போகின்றது என்பது தெரிகின்றது. நம்மிடையே வந்துள்ள சில புதுக்கவிதைகளும், மிகச் சிலவான சிறுகதைகளும் (கோசலை, அரசனின் வருகை) இந்த இலக்கியச் செழுமைக்கான பதச்சோறுகளாக அமைகின்றன.
இது முற்றிலும் புதிய ஒரு அனுபவம். அந்த அனுபவத்தை உள்வாங்கக் கூடிய கருத்து நிலை விசாலமும் உணர்திறன் நேர்மையுள்ள படைப்பாளிகள் மூலம் நமக்குக் கையளிக்கப்படும்.

□□ அடுத்த நூற்றாண்டுக்கான தமிழ் இலக்கியத்தை, ஈழத்திலக்கியமே வழி நடத்திச் செல்லுமென்று சிலரும், இன்னும் ஈழத்து இலக்கியம் முதிர்ச்சி அடையவில்லையென்று இன்னொரு சாராரும் கூறுகின்றனரே! இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?

●● நமது அனுபவங்கள் கலை நேர்மையுடன் பதியப்படும் பொழுது நமது கலை, இலக்கியம் முன்னுக்கு நிற்கும்.

ஆனால், இந்த வினாவுக்கான விடைபற்றிச் சிந்திக்கும் போது, உலக இலக்கிய மட்டத்தில் தமிழிலக்கியம் பெற்றுள்ள முதிர்ச்சி யாது என்பது பற்றிச் சிந்திப்பது அவசியமானது. நாம் இதனை மூன்று, நான்கு மட்டங்களில் வைத்து நோக்க வேண்டி வரலாம்.

* அனைத்துத் தமிழிலக்கியம்
* இந்திய இலக்கியம்
* தென்னாசிய இலக்கியம்
* உலக இலக்கியம்

இப்படிப் பார்க்கும் போது தமிழிலக்கியம் பேசும் மற்றைய பிரதேசங்களில், பிரதானமாக தமிழ் நாட்டில் ஏற்படும் சமூக மாற்றங்களும் அவை இலக்கிய உணர்திறனில் ஏற்படுத்தும் மாற்றங்களை உற்று நோக்கல் வேண்டும்.

தலித்திலக்கியம் சுட்டும் இலக்கிய அனுபவம் இந்தியாவின் (தமிழ் நாட்டின்) அண்மைக்கால சமூக அசைவியக்கத்துள் மிக முக்கியமான ஒன்றாக அமைவதைக் காணலாம்.

அங்கு கதையை, எழுத்தாளர் விடய நோக்காக நின்று எடுத்துக் கூறும் அவதானிப்பு, குறிப்புரை நிலையில் இருந்து தான் கூறும் கதையினுள்ளே தானிருந்து கொள்ளும் ஒரு தன்மை (ஜெயமோகனின் பாணி) வளர்கிறது.

இந்த வளர்ச்சிகளை நாங்கள் உள்வாங்கிக் கொள்வது அவசியம்.

சர்வதேசிய இலக்கியப்பின்புலத்தில் இவ் வளர்ச்சிகளைப் பார்க்க வேண்டும்.

ஏனெனில் நாவல், சிறுகதை, நாடகம், புதுக்கவிதை தமிழுக்கே உரியனவான இலக்கிய வடிவங்கள் அல்ல. அவை இன்று உலகப் பொதுவானவை. அந்த உலகப் பொதுமையை உள்வாங்கி எமது அனுபவத் தனித்துவத்தை வெளியிடும் பொழுது தான் இலக்கியம் செழுமையடையும்.

அடுத்த நூற்றாண்டுக்கான நமது இலக்கிய நோக்கு இந்த முறைமையில் உலகப் பொதுமையையும் ஈழத்துத் தமிழ் தனித்துவத்தையும் இணைப்பதாக அமைய வேண்டும்.

ஈழத்து தமிழிலக்கியம் முதிர்ச்சி அடைய வில்லை என்று எவருமே அடித்துச் சொல்லி விட முடியாது.

அப்படிச் சொல்லவும் இல்லை.

பெரும்பான்மையான நமது சிறுகதைகளைப் பற்றிப்பேசும் பொழுதே ஒரு குறிப்புக் கூறப்பட்டது.

உண்மையில் இன்று எம்முன்னுள்ள சவால் நமக்கு கிடைத்துள்ள வரலாற்று முக்கியத்துவம் உள்ள அனுபவங்களை நமது எழுத்தாளர்கள் எவ்வாறு படைப்பிலக்கியம் ஆக்கப் போகிறார்கள் என்பது தான். வெறும் இயல்பு வாத எடுத்துரைப்பு அதன் ஆத்மாவையே குடித்துவிடும். எனவே தான் புனைகதை எழுத்தாளர்கள் தமது பணியினைச் செவ்வனே செய்ய வேண்டிய ஒரு தேவை உள்ளது.



அடுத்து இருபத்தோராம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியம், மற்றைய தமிழிலக்கியத்தை "வழிநடத்தும்" என்று சொல்வதிலும் பார்க்க, ஈழத்து இலக்கியம் தனக்குள்ள வளம் காரணமாக சில இலக்குகளை, சாதனை எல்லைக்கோடுகளை வரையும் என்று கூறலாம்.

வெளிச்சத்தின் வாசகர் என்ற ரீதியிலும் ஒரு இலக்கிய ஆய்வாளன் என்ற ரீதியிலும் வெளிச்சத்தின் வளர்ச்சி, செல்நெறி பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

சமூகத்தின் முன்னெடுப்பு முயற்சிகளில் இலக்கியத்திற்கு ஒரு பங்குண்டு. அந்தப் பங்கை இலக்கியம் செவ்வனே செய்ய வேண்டும் என்ற உந்துதலுடன் வெளிச்சம் தொழிற்படுகின்றது. ஈழத்திலக்கிய வரலாற்றில் இது போற்றப்பட்ட ஒரு செல்நெறியாக இருந்து வந்திருக்கிறது. அந்த வெளிச்சம் காலத்திற் கேற்ற முறையில் தொடர்ந்து பரவட்டும் என்பதே என் கருத்து. வாசகர்களின் கருத்து விசாலிப்புக்கான பல கட்டுரைகள் இடம் பெறும் வெளிச்சத்திலே படைப்பிலக்கியச் செழுமை மேலும் ஓங்க வேண்டும்.

# அதிகாரத்தின் அரூபகரங்கள்



மிஷேல் பூக்கோ

'மிஷேல் பூக்கோ (MICHEL FOUCAULT, 1926 1984) ஒரு பிரஞ்சு அறிவுஜீவி. ஒரு புதுமையான சமூகச் சிந்தனையாளர். வரலாற்றாசிரியர். சமூக உலகத்தையும் மனித உறவுகளையும் ஒரு புதிய பரிமாணத்தில் வித்தியாசமாக நோக்கியவர். அறிவுலகங்களை அகழாய்வு செய்தவர். அவற்றின் ரிஷி மூலங்களைக் காட்டியவர் அதிகார உறவுகளின் சிலந்தி வலைக்குள் மனித வாழ்வு சிக்குண்டு கிடப்பதை மிகவும் நுட்பமாக எடுத்து விளக்கியவர். பிற்கால நவீனத்துவத்தின் (POST - MODERNISM) பிதாமகர் எனப் போற்றப்பட்டவர். அவரது எழுத்துக்கள் மேற்குலக சிந்தனைப் பாரம்பரியத்தில் என்றுமில்லாத ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது.'

பூக்கோ பற்றிய அறிமுகக் கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார் பிரம்மஞானி. 'அதிகாரத்தின் அரூப கரங்கள்' என்ற தலைப்பில் பிரம்மஞானியின் இத் தொடர் கட்டுரை அடுத்த இதழிலிருந்து வெளிவரும் என்பதை 'வெளிச்சம்' வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

# உடையாத விலங்குகள்

அடேல் ஆன்

*'உடையாத விலங்குகள்' (UNBROKEN CHAINS) என்ற தலைப்பில், யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதன முறைமை பற்றி அடேல் ஆன் ஆங்கிலத்தில் எழுதிய நூல் தமிழாக்கம் செய்யப்பட்டு தொடர் கட்டுரைகளாக 'வெளிச்சத்தில்' பிரசுரமாகி வருகிறது. இந்த நூலின் கடைசிப் பாகத்தை இங்கு தருகிறோம்.*

## 9

### முடிவுரை:

பழங்காலத்தின் எச்சசொச்சமாக இன்றும் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும் சீதன வழக்கானது சமூக சமத்துவமின்மையைச் சுட்டும் ஒரு சமூக அநீதி முறை என்பதை எமது ஆய்வு புலப்படுத்த முனைகிறது. பழைய வழமைகளும் மூட நம்பிக்கைகளும் சொத்துறவுகளும் பின்னிப் பிணைந்திருக்கும் இந்தச் சீதன நடைமுறை மிகவும் சிக்கலானது. அத்தோடு இது உணர்வைக் கிளறிவிடும் ஒரு சமூகப் பிரச்னையாகவும் இருக்கிறது. காரணகாரியச் சுழற்சியுடன் தொடர்ந்து நீடிக்கும் சீதன நடைமுறையானது அடிப்படையில் பெண்களுக்கு எதிரான ஒரு ஒடுக்குமுறை வடிவமாகும். இந்த நடைமுறையிலுள்ள தீங்கான, ஆக்கக்கேடான அம்சங்களைப் பார்க்குமிடத்து, இதனைப் பெண்களுக்கு இழைக்கப்படும் ஒரு சமூக அநீதியாகக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் இப் பிரச்னையை நேர்மையுடனும், துணிவுடனும்எதிர்கொள்வது சாலச் சிறந்தது.

இந்தச் சிக்கல் நிறைந்த சீதனப் பிரச்னையை தீர்த்துவைப்பது எப்படி? இந்த சமூக அநீதியிலிருந்து பெண்ணினத்திற்கு விடுதலையைப் பெற்றுக்கொடுப்பது எப்படி? சமூகத்தில் நிலவும் இந்தச் சாபக் கேட்டை முற்றுமுழுதாக நீங்கிவிடுவது என்பது இலகுவான காரியமல்ல. இந்தப் பிரச்னையை எதிர்கொண்டு தீர்க்க முனையும் எவரும் இந் நடைமுறையின் சமூக நிதர்சனத்தை முதலில் கருத்தில் கொள்வது அவசியம். அதாவது, இந்த சமூக வழமைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு என்பதையும், அது தமிழ் மக்களின் சமூகப் பண்பாட்டு வாழ்வுடன் ஆழ வேரோடியிருக்கிறது என்பதையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும். சமூக நடப்பியலாக,

சமூக வாழ்வுடன் ஒன்றிப் பிணைந்திருப்பதால் இந்த நடைமுறையை மாற்றியமைப்பது சாத்தியமற்றது என்ற ஒரு அவநம்பிக்கையும் பரவலாக இருக்கிறது. இது ஒரு புறமிருக்க, தமது சொந்த நலன்களைப் பேணும் நோக்கில், தற்போதைய சமூக உறவுமுறைகளில் எந்தவொரு அடிப்படையான மாற்றத்தையும் நிகழ்த்துவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆதிக்கமிக்கதொரு சமூகப் பிரிவினரும் உள்ளனர் என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும். இவர்கள் தமது சொத்து நலன்களைப் பேணிப் பாதுகாப்பதையே நோக்காகக்கொண்ட சொத்துடமை வர்க்கத்தினர். பழமைவாதச் சிந்தனையில் புதைந்துநிற்கும் இப் பழமைவாதிகள் ஒளிமயமான எதிர்காலம் நோக்கிய புதிய கருத்துக்களையும் சவால்களையும் சந்தேகக் கண்கொண்டே நோக்குவர். எனினும் சீதனக் கொடுமையை ஒழித்து, புதிய சமூகம் படைக்க விழையும் பெரும்பான்மையான ஒடுக்கப்படும் மக்களின் அபிலாசைகள் இத்தகைய பலம்மிக்க பழமைவாதிகளின் எதிர்ப்புக் குரலால் நசுங்கிப்போக அனுமதிக்கக்கூடாது. மனித மேம்பாடு, சமூக முன்னேற்றம் ஆகிய உன்னத இலக்குகளை நாம் அடையவேண்டுமாயின் இத்தகைய சமூக அநீதி வடிவங்கள் ஒழிக்கப்படுவது அவசியமாகும்.

இந்த நூலின் முதலாம் பகுதியில், சீதனத்தை சொத்துடமைக் கோட்பாடாக நாம் எடுத்து விளக்க முயன்றதுடன் தேசவழமைச் சட்டத்தில் பொதிந்துகிடக்கும் தாய்வழிச் சொத்துரிமை அம்சங்களையும் சுட்டிக்காட்டினோம். அத்தோடு தேசவழமைச் சட்டத்தில் புதைந்துகிடக்கும் கருத்தியல் அம்சங்களை குறிப்பிட்டுக் காட்டி, இச் சொத்துடமை முறைமை எவ்விதம் ஆணாதிக்கத்தைப் பேணுகிறது என்பதையும் விளக்கினோம். இந்தச் சொத்துடமை முறைமையிலுள்ள பிரதான முரண்பாட்டையும் எடுத்துக்காட்டினோம். அதாவது, ஒருபுறத்தில் இது, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பெண்களின் சொத்துரிமையைப் பேணும் அதே சமயம், மறுபுறத்தில் பெண் ஒடுக்குமுறையையும் நிலைநாட்ட முனைகிறது. இந்த முரண்பாட்டைக் களைவது எப்படி?

முதலாவதாக, இந்தப் பிரச்சனைக்கான எந்தத் தீர்வும் பெண்களின் சொத்துரிமைக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம். பெண்களின் சொத்துரிமையானது சட்டவாக்கம் வாயிலாக மேலும் பலப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பில், தாய்வழி மூலம் சொத்தைப் பராதீனப்படுத்துவது, வரலாற்று ரீதியாக அமையப் பெற்றதும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான சொத்துடமை முறைமையாக இருப்பதால், தாய்வழி மரபில் பெண்களின் சொத்துரிமையை பலப்படுத்துவதே பெண்களுக்கு அனுகூலமாக அமையுமென நாம் கருதுகிறோம். இந்த வகையில், பெண்களின் சொத்துடமைமீது கணவன்மாருக்கு கட்டுப்பாட்டு அதிகாரத்தை வழங்கும் தேசவழமைச் சட்ட விதிகளை விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத் துறையினர் நீக்கிவிட்டமையானது பெண்களின் நிலையைப் பலப்படுத்தும் ஒரு முற்போக்கான நடவடிக்கையாகும். இதனை நாம் வரவேற்க வேண்டும். திருமணம் முடிந்தபின்னர் பெண்கள் இம்சைப்படுத்தப்படுவதை தடுக்கவும், பெண்களின் சொத்துரிமைக்கு மேலும் பாதுகாப்பு வழங்கவும் பெண்களுக்கு சட்டத்தின் ஆதரவு அவசியம். உதாரணமாக, திருமணம் முடிந்து ஒரு குறிப்பிட்ட காலம்வரை பெண்களின் அசையும் அசையாச் சொத்துக்கள் விற்பனையாவதை அல்லது மாற்றப்படுவதை தடைசெய்ய சட்டம் கொண்டுவரப்பட்

டால் பெண்களின் கட்டுப்பாட்டில் சொத்துக்கள் இருப்பதை உறுதிசெய்யலாம்.

மணமகனுக்கும், மணமகனின் உறவினருக்கும் பெருந்தொகையில் நன்கொடை வழங்க பெண் வீட்டார் நிர்ப்பந்திக்கப்படுவது சமகால சீதனக் கொடுமையின் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது என்பதை நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். இந்த வழக்கம் பண வசதியுடைய செல்வந்தக் குடும்பங்கள் மத்தியில் நிலவிய பொழுதும், இப்பொழுது இம்முறைமை சமூகத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியில் பல்கிப்பெருகி வருகிறது. பெண்களின் தாம்பத்திய வாழ்வை நிறைவுசெய்யும் நிபந்தனையாக ரொக்கப் பணம் வழங்கும் இந்த இழிய வழக்கத்தில் சுரண்டலும் மோசடியும் நிறைந்திருக்கிறது. சமூக ரீதியில் இந்த நடைமுறை தவிர்க்கப்பட வேண்டும். அல்லாதுபோனால், சட்டமூலமாக இந்த 'நன்கொடை' வழக்கத்தை தடைசெய்வது பற்றி ஆலோசிக்கப்படவேண்டும்.

எமது மதிப்பாய்வின்படி, பெண்களின் உரிமைகளை மேம்பாடு செய்து வலுப்படுத்துவதற்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமான தொன்றே. ஆனால் அடிப்படையான சமூக மாற்றத்தை வேண்டி, சீதனத்தை ஒழித்துக்கட்டும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட பயனையே தரும். மக்களின் சமூகப்பிரக்ஞையில் அடிப்படையான மாற்றம் நிகழாத பட்சத்தில், சமூகத்தில் ஆழவேரோடி நிலைத்துநிற்கும் ஒரு சமூக வழக்கத்தை தடுப்பு நடவடிக்கைகளால் மாற்றுவது சிரமம். எனவே, பெண்களின் உரிமைகள் பறிபோகாது பாதுகாக்கவும், திருமணமுறையில் பெண்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளுடன் இணைந்தாற்போல, பெண்களின் மனித வளர்ச்சியையும், சமூகமேம்பாட்டையும் நோக்காகக்கொண்ட, பரந்த அளவிலான சமூக — பொருளாதாரத் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

சீதன நடைமுறையை ஒழித்துக்கட்டுவதற்கு பெண்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு அவசியமென்பது எமது கருத்தாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பெண்கள் மனிதப் பிறவிகள் என்பதையும், கௌரவத்துடன் சமத்துவத்துடன், சமூக நீதியுடன் வாழ்வதற்கு அருகதையுள்ளவர்கள் என்பதையும் வலியுறுத்தும் முற்போக்கான கருத்துக்கள் பெண்கள் மத்தியில் பரப்பப்பட வேண்டும். இவ்விதமான தீவிர கருத்துப் பிரச்சாரம் வாயிலாக பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை தோற்றுவிக்கவேண்டும். தம்மை அடிமைப்படுத்தி நிற்கும் ஒடுக்குமுறை வடிவங்கள் பற்றி பெண்கள் உணர்ந்துகொள்ளச் செய்யவேண்டும். இந்த விழிப்புணர்வின் அடிப்படையில், ஒன்றுபட்ட சக்தியாகப் பெண்கள் அணிதிரண்டு தமது விடுதலைக்காகப் போராட முன்வர வேண்டும். சமூகத்தின் ஒரு நிலையான, புரட்சிகர மாற்றத்தை நிகழ்த்தி, தமது உரிமைகளையும் நலன்களையும் நிலைநாட்ட வேண்டுமானால் பெண்கள் ஒன்றுபட்ட சக்தியாக விடுதலைக்குரல் எழுப்ப வேண்டும்.

ஆகவே, சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்டுவதாயின் பெண்ணினத்தின் சமூக முன்னேற்றத்தை இலட்சியமாகக்கொண்ட பரந்துபட்ட செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்படுவது அவசியமானதாகும்.

## Selected Bibliography

*Baldaeus. P. A True and Exact Description of the Great Island of Ceylon. The Ceylon Historical Journal, Vol. VIII July 1958 - April 1959 Nos 1 – 4.*

*Bryson. V. (1992) Feminist Political Theory, An Introduction. (London, Mac Millan Press)*

*Coomaraswamy. B. A. 'Thesawalame or The Customary Law of Jaffna' The Hindu Organ June, 19th 1933.*

*'Thesawalame 11 The Dowry System' The Hindu Organ, July 6th 1933*

*'Thesawalame 111' The Hindu Law of Sridhana and The Thesawalame Dowry Law. The Hindu Organ. August 3rd, 1933.*

*The Thesawalame and Marumakkal Thayam Law of Malabar: Two Analogous Systems' The Hiudu Organ. October 23rd 1933.*

*'The Thesawalame and Its Origins: 'Thesawalame and Marumakkal Thayam Laws: Two Analogous Laws,' The Hindu Organ. December 21st 1933.*

*Heitlinger. A. (1979) Women and State Socialism (London. Macmillan Press).*

*Kirupaharan T. J. (1993) Reverential Fear In Matrimonial Consent. Unpublished thesis*

*Kuhn. A and Wolpe. A M. (1978) Feminism and Materialism (London Routledge and Kegan Paul).*

*Lenin. V. I. (1977) On the Emancipation of Women. (Moscow Progress Publishers).*

*Manushi No.2 July-August 1972. 'Indian Women Speak out Against DOwry' Davis. M. (1983) Thrid World Second Sex (London. Zed Press).*

*Manushi No 3. July – August 1979' Editorial. Manushi No. 7. 'Boycott of Dowry Marriages' page 11. Manushi June – July 1983 N. S. Krishnamurti and A. S. Geetha of the Joint Women's Programme, Bangalore. 'Dowry Spreading Among More Communities, Pages 31-32 Manushi No. 34. 1986. Madhu Kishwar Dowry- To Ensure Her Happiness or to Disinherit Her Pages 2 – 13. Manushi No. 48.1988. Madhu Kishwar. Re - Thinking the Dowry Boycott' . Pages 10 - 13.*

*Manushi No. 53. 1989. 'Towards More just Norms For Marrige - Continuing the Dowry Debate' Pages 2 - 9.*

*Mendis, V, L. B. (1983) Foreign Relations of Sri Lanka. (Tisara, Prakasakayo. Ltd).*

*Mutukisna. H. F. (1862) The Tesawal amai (Ceylon Times, Colombo, Ceylon).*

*Oakley. A (1982) Sex, Gender and Society. (London Temple and Smith).*

*Pieris, P. E. (1983) Ceylon The Portuguese Era. (Tisara Prakasakayo Ltd).*

*Ramanathan Sri. T. (1972) Tesawa lamai. The Laws and Customs of the Inhabitants of the Province of Jaffna. (Colombo. Nataraja Press)*

*Rasanayagam. M. C. (1984) Ancient Jaffna (New Delhi. Asian Educational Services).*

*Tambiah H. W. (1950) The Laws and Customs of the Tamils of Jaffna.*

(The Times of India Press). (1954) The Laws and Customs of the Tamils of Ceylon. (Tamil Cultural Society of Ceylon). 'The Laws of Tesawalami'. Tamil Culture Vol VII No. 4 October 1958 Pages 386 - 408.

'The Content of Tesawalamai' Tamil Culture Vol. VIII No 2 April - June 1959. Pages 109 - 143.

The Woman Question. Selections, From the Writings of Karl Marx, Frederich Engels, V. I. Lenin, Joseph Stalin. (New York International Publishers 1971)

Webster. P. (1975) 'Matriarchy A Vision of Power' Towards an Anthropology of Women edited by R. Reiter pages 141- 157. (Monthly Review Press.)

# தமிழீழ விடுதலைக்காக ஒங்கியொலித்த குரல் ஒய்ந்தது

— வெ இளங்குமரன்



பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

மறைமலை அடிகள் பரிதிமாற் கலைஞர் போன்றோர் வரிசையிலே, மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் வழி காட்டலிலே, துரை மாணிக்கமாக இருந்த தனது பெயரை பெருஞ்சித்திரனார் என மாற்றி, வீறோடு தமிழ்ப் பணியாற்றி வந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 11.06.95 அன்று மறைந்து விட்டார் என்ற செய்தி உலகத் தமிழினத்துக்கே பேரிடியாக அமைந்து விட்டது.

அரச அலுவலராயிருந்தும் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டதால் அந்த அலுவலை இழந்து முழுநேரமாகத் தமிழ்ப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பாவலரேறு அவர்கள் தனது 63 அகவைக்குள் 18 தடவை தமிழ்மொழி, தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டம் போன்றவற்றுக்காகவும், தமிழழீ விடுதலைப் போராட்டத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சார்பாக இந்திய அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராட்டங்களை நடத்தியமைக்காகவும் தேசிய பாதுகாப்புச் சட்டம், மிசாச் சட்டம், தடாச்சட்டம் போன்ற கொடிய சட்டங்களினாற் சிறைப்படுத்தப்பட்டார்.

பிறமொழிக் கலப்புக்களிலிருந்தும்,ஊடுருவல்களிலிருந்தும் தமிழ் மொழியைப் பேணிக்காப்பதற்காக தூயதமிழில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற தாளிகைகளை 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடாத்தியதுடன் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளெல்லாமிருந்த தமிழ் மொழிப்பற்றாளர்களை இணைந்து தென்மொழிக்

# வளர்ச்சம்

குடும்பமாகத் தமிழியக்கம் நடத்தி வந்தார். கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நிலம் என்னும் மாத ஏடு ஒன்றையும் தொடர்ந்து நடத்தி அதில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குச் சார்பாகவும் அதற்கு எதிரானவர்களைக் கடுமையாகச் சாடியும் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் துணையாகச் செயற்பட்டார்.

மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில் இந்திய அரசின் அச்சுறுத்தல்கள் நெருக்கடிகளுக்கு அஞ்சி பெரும்பாலான தமிழக அரசியற் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்துக்குச் சார்பாகக் குரல் கொடுக்கத் தயங்கியிருந்த காலங்களிலெல்லாம் கூட பாவலரேறு அவர்கள் தனித்தும் ஏனைய விடுதலைப்புலி சார்பாளர்களுடன் இணைந்தும் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்.

இந்திய - விடுதலைப்புலிகள் போர் தொடங்கிய பின் தளபதி கிட்டு சென்னையில் இந்திய அரசால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதைக் கண்டித்து ஈழத்தமிழர் உரிமைப்பாதுகாப்புக் கூட்டமைப்பில் இணைந்து மந்தை வெளியிலிருந்து அடையாறு இந்திரா நகரில் தளபதி கிட்டு இருந்த விடுதலைப்புலிகள் அலுவலகம் வரை ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி தளபதி கிட்டுவிடம் கூட்டமைப்பின் தீர்மானங்களைக் கொடுத்தார். விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக உண்ணா நோன்புப் போராட்டம், மாந்தத் தொடரிப் (மனிதச் சங்கிலி) போராட்டம் போன்ற போராட்டங்களிலும், கலந்து கொண்டதுடன் வெளிநாடுகளிலும் விடுதலைப் புலிகளுக்காக பல பரப்புரைக் (பிரச்சாரக்) கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கலந்து கொண்டவர். தளபதி கிட்டுவை இந்திய அரசு வங்கக் கடலிலே வழி மறித்துக் கொன்றதைக் கண்டித்து கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். விடுதலைப்புலிகளின் பாலும் அதன் தலைவர் பிரபாகரன் பாலும் பெருமதிப்பும் பற்றும் வைத்திருந்தபாவலரேறு அவர்கள், ''தமிழக வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மலைபோல் வளர்ந்தோங்கி நிற்பவன் பிரபாகரனே அவன் வீரத்துக்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை. அவன் வீரமும் உறுதியும் தமிழினத்தின் மேற் கொண்ட பற்றும் நாம் பெரிதும் மதிக்கத்தக்கவை. அந்தப் புலி வீரனை யாரும் அரசியற் கூண்டுக்குள் அடைத்து வைக்க விரும்புவது நம் அருந் தமிழீழ நலத்திற்கு நல்லதில்லை. அவனை வைத்துத்தான் தமிழினம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். ஆயிரம் அரசியற் காரர்களை நாம் உருவாக்கலாம். ஒரு விடுலை வீரனை நாம் வளர்த்து உருவாக்குவது கடினம். அவனைப் பார்த்துப் பொறாமையாற் புழுங்கும் அரசியற் காரர்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்வது நல்லது. ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, டெலா, ஈ என் டி எல் எவ், பிளட் போன்ற அமைப்புகளைச் சார்ந்தவர்களை விட ஆயிரம் மடங்கு உயர்ந்தவன் பிரபாகரன். 1977ல் நான் ஈழம் சென்று வந்ததிலிருந்து இன்று வரை மிக ஆழமாகவும் அகலமாகவும் தமிழீழ விடுதலையுணர்வுகளையும் போக்குகளையும் மட்டுமன்று தமிழினத்தின் ஒட்டு மொத்த படி நிலை வளர்ச்சி வரலாறுகளையும் அலசி ஆராய்ந்த பின்னரே இதைச் சொல்கிறேன்'' என்று உலகத்தமிழர்களுக்கு தமிழ் நிலம் ஏட்டினூடாகத் தெளிவாக அறிவித்தார்.

உலகத்தமிழின முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கி உலகத் தமிழர்களினது நலன்களுக்காக உழைத்த அந்தப் பெரியாரின் மறைவு தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் விட்டவழி தமிழ்ப்பணியைத் தொடர்வதே அவரது தன்னலமற்ற அயராத உழைப்புக்கு நாம் செலுத்தும் நன்றியாகும். பட